481

Approved by the Director of Public Instruction

# TAMIL FIRST FORM

OR

# FIFTH STANDARD READER

*NEW SERIES*

(REVISED)

# ஐந்தாம் வாசகப் புத்தகம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1924

விலை, 5 அணா

TB
031(5)
N24
84896

# FIRST FORM

OR

# FIFTH STANDARD READER

**TAMIL**

*NEW SERIES*

# ஐந்தாம் வாசக புத்தகம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1924

# பொருளடக்கம்—CONTENTS

பாடம். பக்கம்.

1. பாலிய ககோள வித்தியார்த்தி—The Little Astronomer. 1
2. இரண்டு வெள்ளாடு—The Two Goats ... ... 3
3. இறைவனும் இச்சகனும்—The King and the Flatterer. 5
4. எனக்கு உழைப்பவன் யாவன்?—Who works for me. 7
5. தற்சிந்தை—Selfishness ... ... ... ... 9
6. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்–The Wolf and the Lamb ... 11
7. முதலை—The Crocodile ... ... ... ... 15
8. மகாப் பிரதிநிதி—The Great Advocate ... ... 17
9. நோய்—Sickness ... ... ... ... ... 18
10. இலாபத்திற் பாதி எனக்குக் கொடு—Half of the Profit. 20
11. பரிகாசப் பட்சி—Mocking Bird ... ... ... 23
12. அர்த்தநாசஞ்செய்த புத்திரனைக்குறித்துச் சொல்லிய உவமை—Parable of the Prodigal ... ... ... 26
13. மோசம் நாசம்—Deceit brings Destruction ... 29
14. மூன்று தீமைகள்—Three Bad Things ... ... 31
15. சிங்கம், கரடி, குள்ளநரி—Lion, Bear and Fox ... 32
16. அறிவின் அருமை பெருமை—The Value of Knowledge ... ... ... ... ... ... 34
17. ஆமை—The Tortoise ... ... ... ... 36
18. சக்கரவர்த்தியும் சிறுவனும்–The Emperor and the Boy. 38
19. ஜ்வரம்—Fever ... ... ... ... ... 42
20. சிங்கம்—Lion ... ... ... ... ... ... 44
21. உதாரமதியுள்ள சேவகன்—The Noble Servant ... 48
22. விலைமதித்தற்கரிய விசேஷ பூஷணங்கள்—The Best Jewels ... ... ... ... ... ... 51
23. பெண்கள் கல்வி—Female Education ... ... 52

பாடம். பக்கம்.

24. புத்திர கடன்பாடு—Filial Duty ... .. ... 56
25. சிலந்திப்பூச்சி—The Spider ... ... ... ... 59
26. விதைப்பும் அறுப்பும்—Sowing and Reaping ... ... 61
27. கலகமும் சண்டையும்—Quarrelling and Fighting ... 62
28. தவளையும் சுண்டெலியும்—Frog and Mouse ... ... 65
29. தின மூட்டை—The bag of Days ... ... ... 68
30. தாதுலக்ஷணம்—Properties of Metals ... ... 70
31. சீனர் பாடசாலை—A Chinese School ... ... ... 72
32. சிலந்திப்பூச்சியும் புரூஸ் தளபதியும்—Bruce and Spider. 75
33. சூரியன்—The Sun ... ... ... ... ... 77
34. பூமியின் தினகதி—Daily Motion of the Earth ... 80
35. சிங்கமும் வெள்ளாடும்—The Lion and the Goat ... 81

## செய்யுள்—POETRY

இனியவை நாற்பது ... ... ... ... ... 85
இன்னா நாற்பது ... ... ... ... ... 88
நீதிவெண்பா ... ... ... ... ... ... 90
நீதிநெறி விளக்கம் ... ... ... ... ... 92
நளவெண்பா ... ... ... ... ... ... 94
அரிச்சந்திர புராணம் ... ... ... ... ... 95

# FIRST FORM READER

# ஐந்தாம் வாசக புத்தகம்

## வசனபாகம்

### 1. பாலிய ககோள வித்தியார்த்தி

பிரான்சு தேசத்திற் பிறந்த பீற்றர் காஸெந்தி என்னு மொருவன் விவேகமும் வித்தையும் முதிர்ந்த நிபுணன். இளமையில் ஏழு பருவத்தில் இராத்திரிகாலத்தில் வான ஜோதிகளைக் கவனித்துப்பார்க்க அவனுக்குத் தணியா வாஞ்சை உண்டு. பெரும்பாலும் அவன் அர்த்தராத்திரியில் விழித்தெழுந்து வெளியே சென்று சந்திரனையும் தாரகாகணத்தையும் கருத்துக்கூர்ந்து பார்ப்பது வழக்கம்.

ஒருநாள் பொழுது அஸ்தமித்தபின் அவ்விளைஞன் தன் பருவமுள்ள சிறுவர் சிறுமியர் இரண்டு மூன்று பெயருடன் உல்லாசமாய் உலாவிவரும்பொழுது, வானத்திற் பூரண சந்திரன் பிரகாசமான நிலவுகால, அடர்த்தியின்றி வெளுத்திருந்த மேகமநேகம் காற்றடித்த திக்கில்பறந்துபோவதுகண்டு, கடலிற் கலம் செல்வதுபோல ஆகாயத்திற் செல்வது சந்திரனு, மேகமா என்று அந்தப் பிள்ளைகள் தமக்குள்ளே தர்க்கிக்க ஆரம்பித்தார்கள். மேற்குறித்த சிறுவர் சிறுமியர்கள்

மேகம் ஓடவில்லை, நின்றநிலையிற் பிரியாது நிற்கின்றது ; ஓடுவது சந்திரன் என வாக்கும் மனமும் ஒத்து உறுதியிட்டார்கள்.

அதுகேட்டு, பீற்றர் என்பவன் சந்திரன் நின்ற நிலையினின்று பெயர்ந்து செல்லுகின்றதென நீங்கள் நினைந்து சொல்வது தப்பு. சந்திரனுக்கு நமது கண்ணுக்குத் தோன்றும் இயக்கம் சிறிதுமில்லை. இத்தனை தீவிரகதியாய்ச் செல்வது மேகம் என்பதாக வற்புறுத்தி மொழிந்து, எத்தனையோ நியாயங்களை எடுத்துக் காட்டினன். அந்த நியாயங்கள் அவர்கள் செவியில் நுழைந்தவொழிய மனதிற் பதியவில்லை. அப்பால் அவன் அவர்களுக்குப் பின்வரும் யுத்தியை உபாயம் சூழ்ந்து சொன்னன் :—பெரிய விருட்சம் ஒன்றின் கீழே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி, அதன் கிளைகளின் இடையில் பூரணசந்திரனை உற்றுப்பார்க்கச் சொன்னன். அவர்கள் சற்றுவேளை கருத்தைச் சிதறவிடாமல் சந்திரனை விழித்த கண் இமைக்காமற் பார்த்தவண்ணமாக நின்று, சந்திரன் நின்றநிலை நீங்காது நிற்க, மேகங்கள் ஓடிப்பறந்து மறைந்துபோவதைத் திருஷ்டாந்த பூர்வமாய்க் கண்டு உள்ளந்தேறி, பீற்றர் சொன்னது யதார்த்தமென்றும் தங்கள் சொல் தப்பிதமென்றும் ஒப்புக்கொண்டார்கள். ஒப்புக்கொள்ளாமல் தீராதே.

வித்தையில் காலேந்தி என்னும் இந்த விவேகிக்கு உள்ள ஆசைக்களவில்லை. தன் விருப்பத்தின்படி நூல்களை வாசிக்கப் பகல் முப்பது நாழிகையும் போதாமல் இரவிலும் வெகு நாழிகைவரையிற் சிறிதும் அலுப்பின்றி அவன் வாசித்துக் கொண்டிருப்பான். ஆகப் பத்துப் பருவத்தில் அவனுடைய விவேக நுணுக்கத்தையும் சலியா முயற்சியையுங் கண்டு வியந்துகொண்ட பண்டிதர் ஒருவர் ‘ இந்தப் பிள்ளையாண்டானை எத்தனை நாட்சென்றும் இவன் காலத்தில் உள்ள மனுஷர்

அற்புத வித்தகனென்று நெஞ்சார வியந்து வாயாரப் புகழ்ந்து கொண்டாடுவதற்கு ஐயமில்லை' என மொழிந்தனர். காளிதாஸந் தியின் அதிசய வித்தியாலங்காரத்திற்கு அவனிடத்திற் சிறந்து விளங்கிய அடக்கம் விசேஷ அலங்காரமாயிருந்தது. விளைந்த கதிர் வணங்கும். பல கலைகளைக் கற்றறிந்த பண்டிதர் தாம் 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்று நாணி அடங்குவார்.



## 2. இரண்டு வெள்ளாடு

ஒருநாள் ஒரு நதியின் அக்கரையில் ஒன்றும் இக்கரையில் ஒன்றுமாக வெள்ளாடுகள் இரண்டு போய் நின்றன. ஆறு கடந்து போவார் வருவார்க்கு அந்நதியில் மரவாராவதி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அவ்வாராவதியின் மரம் அகலமின்றி மிகவும் ஒடுங்கியிருந்ததினால் ஆடுகள் இரண்டும் தட்டாமல் தடுக்காமல் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய் ஏககாலத்தில் ஆறு தாண்டுவது அசாத்தியமாயிருந்தது.

வாராவதி இப்படி இடுக்காயிருந்ததினால், இக்கரையில் நின்ற ஆடு வாராவதி ஏறி ஆறு கடந்து அக்கரை சேர்ந்த பின், அங்குள்ள ஆடு தானும் சுகமே அவ்வழியால் நதி தாண்டிப்போனாற் போகலாம். இதில் ஒரு சங்கடமுமில்லை. ஆனால், கர்வமுள்ள அவ்வாடுகளிரண்டும் பொறுமையின்றி ஒன்றுக்கொன்று முந்திப்போகப் பதைத்தன. 'இந்தப் பாலத்தின் வழியாய் நதி தாண்ட உனக்குள்ள சுதந்தரம் உன்னைப்போல் எனக்குமுண்டு. பின்னர் நீ ஆறு தாண்டுமளவும் நான் காத்திருந்து வீணிற் பொழுதுபோக்குவதேன்' என்று ஒரு ஆடு சொல்ல, மற்றது 'இந்த வாராவதி கட்டியது உனக்கும் எனக்குமொழிய உனக்குமாத்திரம் அல்லவே' என்று எதிர்வழக்குரைத்தது.

இந்தப்பிரகாரம் இரண்டொரு நாழிகைநேரம் ஆடுகள் இரண்டும் வாதிட்டு, கடைசியில் வந்தது வரட்டுமென்று ஒன்றுக்கும் அஞ்சாமல் மனம் துணிந்து இக்கரையில் நின்ற ஆடு வாராவதி ஏற, எதிர்க்கரையில் நின்றது மாற்றானுக்குப் பின்னிடைந்து நிற்பது இழிவென்று தானும் ஏறியது. அவைகள் தீப்பொறி பறக்கக் கண் சிவந்து ஒன்றை ஒன்று முகம் கடுத்துச் சினந்து பார்த்தது. 'ஆண்மை குன்றி உனக்கு அஞ்சிப் பின்னிடைந்து நிற்காமல் நான் முந்திப் போவேன்' என்று வாய்திறந்து சொல்வதுபோல் இருந்தது.

முகக்குறிப்பால் தோன்றியவண்ணம் அவை இரண்டும் முன்வைத்த காலைப் பின்வைக்காமற் சென்று வாராவதி மத்தியில் ஒன்றுக்கொன்று நெருங்கி எதிர்ப்பட்டன. தட்டாமல் முட்டாமற் போகப் பாலம் அகன்றதல்லவே. ஆனதன்மையால் இரண்டும் முட்டி ஆற்றில் விழுந்து முழுகிப் போயின.

இது நிற்க, மிகவும் உயர்ந்த ஒரு செங்குத்து மலைச்சிகரத்தின் ஒரு பக்கம் சற்றுப்புடைத்து ஒடுங்கியிருந்தது.

அவ்வழி தாண்டிப்போக இருபக்கமும் இரண்டு ஆடுகள் எதிர்ப்பட்டன. அவைகள் இரண்டும் ஏககாலத்தில் அவ் வொடுக்கமான வழியில் அக்கம் பக்கம் போக முடியாது. ஒன்று போன வழியே திரும்பி மலைச்சிகரத்தைச் சுற்றிவரு வதுமோ சாத்தியமல்ல, வெகுதூரம் சுற்றவேண்டும். இத் தனை பிராணசங்கடம் நேர்ந்த சமயத்தில் அந்த ஆடுகள் செய்த உபாயம் என்ன? சொல்லுகிறேன். ஒன்று மலைப்பக் கத்தில் ஒடுங்கிப்புடைத்த இடத்தில் தன் உடலை ஒடுக்கிப் படுத்துக்கொள்ள, மற்றது பதறாமல் மெதுவாக அதைத் தாண்டிச் சென்றது. பின்பு படுத்திருந்த ஆடும் எழுந்து இரண்டும் அதனதன் வழியே கஷ்டமின்றிப் போயின.

மனுஷர் ஒருவர்க்கொருவர் கிருதுபேசி வீணுக்கு வாதி டுவது எத்தனை மதியீனம்! இப்படிச்செய்வது துர்ச்சனர் இயற்கை. இந்த இயற்கை உள்ளவர்கள் எல்லாரும் பெரும் பாலும் நாசமாய்ப் போவார்கள். அவர்களுக்கு ஒருபொழு தும் விர்த்தி இல்லை.

‘அழிவிற்கு முந்திச் செல்வது அகந்தை, விழுகைக்கு முந்தியது வீறுப்பு.’

‘விவாதத்தின் ஆரம்பம் நீர் வடிந்து தொலையக் கரையை வெட்டுவதுபோலாம். ஆதலால், விவாதத்தில் அடியிடுமுன் அதை விட்டுவிடு.’

## 3. இறைவனும் இச்சகனும்

பெரியோர் சமுகத்திற் போய் இங்கிதஞ்சொல்லி வயிறு பிழைத்து நாட்கழித்த ஒருவன் ஒருநாள் ராஜசமுகம் சேர்ந்து ‘மஹாராஜாவே, மனுஷருக்கு இவ்வையகத்தில் அமையத்தக்க உத்தம நற்பேறுகள் அனைத்தும் தங்களுக் குக் குறைவில்லாதிருக்கின்றன. தங்கள் செல்வப்பொரு

ளுக்கு அளவில்லை. தாங்கள் சம்பிரமமாக வாழ்ந்து ராஜ்ப பாரம் தாங்கி இஷ்டப்படி அதிகாரம் செலுத்திக்கொண்டு வருகின்றீர்கள். ராஜபிரபு அவர்களிலும் மிக்க மனோசுகம் உள்ளவர்கள் இந்தராஜ்பத்தில் எங்கும் இல்லை' என முக ஸ்துதி சொன்னான். அதுகேட்டு, அரசன் அவனைத் திரும் பிப்பார்த்து 'நீ இத்தனை வாக்கு விஸ்தாரமாக வியந்து பாராட்டுகின்ற மனோசுகத்தை அனுபவித்து அறிய விரும்பு கின்றாயா?' என வினவினான். அவ்விச்சகன் அரசனுக் குத் தன்மீது அபூர்வ தயை பிறந்திருப்பதாக நினைத்து மன மகிழ்ந்து 'ஆமாம் தர்மதுரையவர்களே, விரும்புகின்றேன்' என்று உத்தரம் சொன்னான்.

பின்னர் அரசன் மாற்றுயர்ந்த செம்பொன்னில் விசித்திர மாகச் செய்து நவரத்தினமிழைத்துப் பீதாம்பரத்தால் திரை யிட்டு, பட்டுறையுள்ள பஞ்சணைமெத்தை போட்டுப் பரி மளிக்கும் மலர் தூவிய மஞ்சத்தின்மீது அவனை வீற்றிருக் கக் கற்பித்தனன். உருவிற் சிறந்த வாலிபர்கள் அவனுக்குக் குற்றேவல் செய்ய மஞ்சத்தின் நான்கு பக்கமும் வணங்கி நின்றார்கள். விதம்விதமான வாசனைத் தைலமும் நறுமணங் கமழும் மலர்தொடுத்த மாலைகளும் ஆங்கு வைக்கப்பட்டிருந் தன. அகிற்கட்டை முதலிய வாசனைத் திரவியங்கள் எரிந்து எழுந்த புகை எங்குமுலாவியது. வெள்ளிக்கிண்ணங்களி லும் பொற்கிண்ணங்களிலும் பணிக்காரகச் சமைத்த அறு சுவை உண்டியும், மதுரமான கனிவர்க்கங்களும், நாவிற்கித மான பலகாரங்களும் சட்டமாய் வட்டித்திருந்தன. இத் தனை வைபவங்களெல்லாம் எளிதாகப்பெற்ற அதிஷ்டத்தை எண்ணி இச்சகனுக்குச் சொல்லிலடங்காத ஆனந்தமுண்டா யிற்று.

அதன்பின் அம்மன்னன் பளிச்சென்று மின்னும் உரு வினக்கத்தி ஒன்றை ஒரே ஒரு குதிரைமயிரில் தொடுத்து

முகட்டிற் கட்டி அவன் தலைக்கு நேராகத் தொங்கவிட உத்தரவு செய்தனன். பளபளென்று எறிக்கும் கூரிய கத்தி தொங்குவதைக் கண்டதட்சணமே ஆனந்தாவேசனுயிருந்த அந்த ஆசாரக்கள்ளனுக்கு அச்சமும் ஆருத்துயரும் உண்டாயின. தன்னைச் சூழ்ந்து உபசரிக்கக் காத்து நின்ற அழகில் மிக்க வாலிபரைத் திரும்பிப் பார்க்கவும், அறுசுவை உண்டிகளை உண்ணவும் அவன் மனம் ஒப்பவில்லை. விறைத்து நடுநடுங்கி அவன் 'இந்த நிலை எனக்கு எவ்வளவும் ஏற்காது; எளிய குலத்திற் பிறந்து இத்தனைநாளும் ஏழையாகக் காலந்தள்ளின என்னை மீளவும் அந்த ஸ்திதியில் இருந்து நாட்கழிக்க விட்டுவிடும்படி பணிந்து வணங்கி இரந்து கேட்கின்றேன்' என்று வேந்தனை வருந்தி வேண்டிக்கொண்டான்.

உருவின கத்தி முகட்டிற் கட்டிச் சிரசின்மேலே தொங்க, இச்சகன் ஒருவனைச் சிறந்த மஞ்சத்தில் உட்காரவைத்திருந்தது, இவ்வுலகில் அக்கிரமத்தில் முதிர்ந்த ஐஸ்வரியவான் ஒருவனுடைய நிலைமையைக் குறிப்பிக்கும் அடையாளமாம். அவன் தனக்கு ஒருவிதத்திலுங் குறையில்லையென்று மனம் மகிழ்ந்து சுகித்திருந்தாலும் இருப்பான். ஆனால், மனந்திரும்பி நல்வழிப்படாதிருந்தால் தேவநீதி எனும் கட்கம் குறித்தகாலத்தில் அவன் சிரசில் விழுந்து நொடிப்பொழுதில் அவன் பிராணனையும், அதனுடன் சகல சிற்றின்ப போகங்களையும் ஒழிவிப்பதற்கு ஐயமில்லை.

## 4. எனக்கு உழைப்பவன் யாவன்?

எளிய கிழவி ஒருத்தி பகலெல்லாம் பாடுபட்டு உழைத்து, ஒருநாள் சாயரட்சை தன் குடிசை வாயிலில் உட்கார்ந்திருக்கும்பொழுது 'நான் இப்படி வெயர்க்க வெயர்க்க

ஊருக்கு வருந்தி உழைக்க, எனக்கு உழைப்பவர் எவரும் இல்லாதிருப்பது என்ன அநியாயம்' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னாள். அவ்வேளையில் அண்டையிற் சென்ற புத்திமானாகிய அயலவன் ஒருவன் அவள் சொற் கேட்டு, பின்வருமாறு அவளுக்குச் சில புத்திமதிகளைப் புகட்டினான் :—

'பாட்டி, பாட்டி, உனக்கு உழைப்பவர் ஒருவரும் இல்லையென்று சொன்னாய்! அது முழுவதும் தப்பு.

'நீ இப்பொழுது சாதம் சமைக்கப் போகிறாய் அல்லவா? கழனியில் நெல் விதைத்து, விளைந்தபின் அறுத்து, அரியைச் சுமைசுமையாய்க் கட்டி எடுத்துக்கொண்டுபோய்ப் போர் போட்டு அடித்துத் தூற்றிக் கடைக்கு விற்கக் கொண்டுபோன வர்கள் யார்? மிளகாய், மிளகு, சீரகம், கடுகு, கொத்தமல்லி முதலிய கறிச் சரக்குகளை விளைவித்தவர்கள் யார்? விரிகடல் நீரை இறைத்து உப்பு விளைவித்தவர்கள் யாவர்? விளைந்த உப்பை ஊர் ஊராய்க் கொண்டுவந்து சேர்த்தவர் எவர்? நீ காய்கறி அரியும் கத்தி ஒருவரும் செய்யாமல் தானே உரு வாகி வந்ததா? பூமிக்குள் விளைந்த இரும்பை வெட்டியெடுத் தவர்கள் யார்? பின்பு அதை உலையிலிட்டுக் காய்ச்சி அடித் துக் கத்தி செய்தவர்கள் யாவர்? கறிக்கு வேண்டிய வெஞ் சன முதலியவைகள் அரைக்கும்பொருட்டுக் கல்லில் அம்மி வெட்டிப் பொளித்தவர்கள் யார்? சாதம் சமைக்கும் மண் பாண்டங்களை வனைந்தவள் நீ தானா?

'வெகுதூரம் போகவேண்டாம், நீ உடுத்திருக்கும் ஆடை யை நினைத்துப்பார். அது பருத்தி நூலில் நெய்தது. கிருஷி கர் கருமண் நிலம் உழுது பருத்தி விதைத்தார்கள். அது முளைத்து வளர்ந்து செழித்துப் பூத்துக் காய்த்துக் காய் முதிர் ந்து வெடித்தபின், அவர்கள் மனைவி மக்கள் பஞ்செடுத்துக் கொட்டிப் பன்னி நூல்நூற்று, அந்த நூலால் வஸ்திரம்

செய்யப்பட்டது. நல்லது, இத்தனைபேரும் உனக்காக மேற்குறித்த வேலைகளெல்லாம் செய்யாதிருந்தால் உடுக்க உனக்கு ஆடைவேண்டுமே, அதற்கு என்ன செய்வாய்?

'கிறிஸ்த வேதபுத்தகம் ஒன்று நீ வைத்திருப்பது எனக்கு மெத்தவும் சந்துஷ்டியே. மனுஷருக்கு அமையும் செல்வம் அனைத்திலும் சிறந்து உயர்ந்த மகத்தான செல்வம் அதுவே. காகிதத்தையும் அச்சுயந்திரத்தையும் மையையும் யூகித்து உண்டாக்கினவர்கள் யார்? அந்தப் புத்தகத்தை அச்சிட்டவர்கள் யார்? தாள் தாளாக மடித்துத் தைத்துப் புத்தகம் கட்டினவர்கள் யாவர்? அதை உன் கையிற் கொண்டு வந்து சேர்த்தவர்கள் யார்?

'இந்தச் சிறிய குடிசைக்குள் நீ வைத்திருக்கின்ற போஜன பதார்த்தம், துணி, மணி, சாமான், தட்டுமுட்டு இவைகள் சமஸ்தமும் உன் வசத்தில் வந்துசேருமுன், இவைகளை உனக்காக அலுப்பற்று மனப்பூர்வமாய் வருந்தி உழைத்து உற்பத்திசெய்த தொழிலாளர் எல்லாரையும் பெயர்பெயராக எடுத்துரைக்க ஏறக்குறைய அரைநாள் செல்லும். உனக்கு உழைப்பவர் எவரும் இல்லை என்று யோசிக்காமல் இனி ஒருபொழுதும் சொல்லாதே.'

## 5. தற்சிந்தை

ஒரு நாயும் பூனையும் ஒருநாள் மடைப்பள்ளி வாசலுக்கு எதிரில் உட்கார்ந்திருக்கும்போது சுயம்பாகி இறைச்சித் துண்டு நாலைந்தைக் கொண்டுவந்து முற்றத்திற் போட்டான். போடவும், அந்த நாயும் பூனையும் திடுக்கென்றெழுந்து ஆத்திரத்தோடு ஒன்றுக்கொன்று முந்திப்போய் அதை எடுக்கப் பார்க்க, பூனையிலும் வலிமையுள்ள நாயானது பூனையை

வெருட்டித் தூரத்திவிட்டு, இறைச்சித்துண்டுகள் அனைத்தையும் நாலைந்து கவ்வில் எடுத்து விழுங்கியது. தன் காரியத்தில் மாத்திரம் கண்ணுயிருந்து தன் ஆசையைத் தீர்க்கும் இந்தக் குணத்திற்குத் தற்சிந்தை என்று பெயர். அவ்வேளையில் அந்த நாய் தன்னயத்திற் கருத்தும் காதலுமாயிருந்ததொழிய, பூனைக்கு வரும் நயத்தைச் சிறிதும் எண்ணவில்லை. நாயைப்போலப் பூனைக்கும் அந்த மாமிசத்தின்மேரில் ஆசை மிகுதியே. ஆயினும் வலிமைக்கு வழக்கில்லை. வலிய நாய் எளிய பூனையைச் சுளித்துப்பார்த்துத் தூரத்திவிட்டு இஷ்டப்படி எளிதாக இறைச்சி முழுவதையும் தானே தின்று விட்டது.

நாய்க்குள் உள்ள அறிவு இம்மாத்திரந்தான். யாவையும் யாவரையும் சிருஷ்டித்துப் பாதுகாத்து அவரவர் நல்வினை தீவினைக்குத் தக்க பலனளிக்கும் தெய்வம் இருக்கின்றதென நாய்க்குத் தெரியாது. ‘மனுஷர் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகள் எவைகளோ, அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்’ எனப் பிறந்திருக்கின்ற பொன்போலும் சிறந்த தர்மவிதியை அந்தச் சுணங்கன் அறியுமா, அறியாது.

ஆனால், மனுஷரென்று உடம்பெடுத்த நமக்குரிய தன்மையும் வேறு. நாம் கைக்கொண்டு ஒழுகக் குறித்திருக்கும் தர்மவிதியும் வேறு. மேற்சொல்லிய நாயைப்போல, பிறர் என்ன கேடுகெட்டாலும் நாம்மாத்திரம் குறைவற்றசெல்வராகவாழ்ந்திருக்கவேண்டுமென்று இச்சிப்பதைவிட்டு, நீதிநெறி விலகாமற் பிறரில் அன்புகூர்வது நமதுகடனென்று நமக்குக் கற்பனை பிறந்திருக்கின்றது. பிறருக்குச் செல்லவேண்டிய சுதந்தரத்தையேனும் சொத்தையேனும் நாம் தடையின்றி முறைமைப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்துவிடுவதுந் தவிர, அவர்கள் மேல் தயை தாட்சண்ணியமுள்ளவர்களாயிருப்பதும் நமது

கடனே. பிறர் நயத்தை மறந்திருக்கும் தற்சிந்தையானது பெரும் பாதகம். தற்சிந்தையுள்ளவன் ஒருபொழுதும் சற்குணனுகான். அவன் மனதிற்கு ஒருநாளும் சுகம் இல்லை; ஊர் உலகம் அவனில் அன்புகூர்வதும் இல்லை.

நாம் எல்லோரும் அவனவன் தன் தன் வாழ்வில், தன் தன் செல்வத்தில், தன் தன் சுகத்தில், தன் தன் விர்த்தியில் சிந்தைவைத்து, அல்லும் பகலும் அந்த விசாரமன்றி வேறு விசாரம் இல்லாதிருப்போமாஞல் நமக்கு அந்தப் பீடையிலும் தீராப் பெரும்பீடை இவ்வுலகில் வேறுமுண்டோ? சிறு பிள்ளைகள், பெரியவர்கள் எல்லாரும் நாயைப்போலவும் பூனையைப்போலவும் யார்கெடினும், யாருக்கு எந்த ஆபத்து வரினும் தாம் தாம் பெருகி வாழ்ந்து பிரபலராகும்படி இச்சித்து நடப்பதாக வைத்துக்கொள்வோமாஞல், இடையின்றி எப்பொழுதும் அவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் ஏதாவது சண்டையும் பிணக்கும் அமர்க்களமும் உண்டாமோ!

அறிவுகெட்ட எளிய விலங்குகளுக்குள்ளதிலும் சிறந்து உயர்ந்த திவ்வியமான இயற்கையை நமக்கு அமைத்து, நாம் ஒருவர்க்கொருவர் நெஞ்சுருகி உள்ளன்புள்ளவர்களாய் நடப்பது கடனென்று கண்டறிந்து ஒழுக நம்மை வல்லவர்களாக்கிய கடவுளுடைய ஒப்புயர்வில்லாத நன்றியை நாம் ஒருபொழுதும் மறவாதிருந்து அவரைத் துதிக்கவேண்டும்.

## 6. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

நெருப்புபோல வெயில் எரித்த ஒருநாள் ஒரு ஓநாயும் ஆட்டுக்குட்டியும் தாகத்திற்குத் தெண்ணீர் குடிக்க மலையடிவாரத்தில் ஒரு சிறு நதிதீரத்திற்கு வெவ்வேறு திக்கினின்று



ஏககாலத்திற் போய்ச் சேர்ந்தன. அவ்வாற்றங்கரையில் ஓநாய் நின்று தெண்ணீர் குடித்தஇடம் மேடு; அதற்குச்சற்று எட்ட ஆட்டுக்குட்டி நின்று குடித்தஇடமோ பள்ளம். ஓநாய், தானுய் வந்து கண்ணுக்கெதிர்ப்பட்ட அவ்வாட்டுக்குட்டியைப் பிடித்துப் பட்சிக்கச் சமயம் வாய்த்ததென்று எண்ணி அதனுடன் சண்டை தொடுக்க எத்தனித்துப் பின்வருமாறு வழக்கிடத் தொடங்கியது :—

ஓநாய்—வெகுதூரம் தொலையினின்று தாக உபத்திரவம் சகிக்க ஆற்ருமல் இந்தக் கடுவெயிலில் துடிக்கப்பதைக்க ஓடிவந்த என்னைத் தாகந்தீரத் தெண்ணீர் குடிக்க விடாமல் நீ ஏன் நீரைக் கலக்கிச் சேருக்கிவிடுகிருய்?

தலையில் இடி விழுந்ததுபோலக் கோநாய் நிர்நிமித்தமாய்க் கேட்ட இந்தக் கேள்விக்கு எளிய ஆட்டுக்குட்டி பணிந்து சொல்லிய உத்தரம் :—

ஆட்டுக்குட்டி—ஐயா, தாங்கள் சொல்வது எனது புல்லறிவிற்குச் சற்றுவது புலப்படவில்லையே. நான் ஆற்றில் இறங்கி நீரைக் கலக்கவில்லை; ஆற்றங்கரையில் நின்று தாக சாந்திபண்ணுகின்றேன். தங்கள் சொற்படி தெண்ணீரைக் கலக்கினேனென்றே வைத்துக்கொள்ளினும் அதனுல் தங்களுக்குக் குறை ஒன்றுமில்லையே. தாங்கள் நிற்கின்ற இடம்

மேடு, நான் நிற்கும் இடமோ பள்ளம். 'வெள்ளம் பள்ளத்தை நாடும்' என்பது ஊருலகம் அறிந்து ஒப்புக்கொள்ளும் பழமொழி. தாங்கள் நிற்கும் இடத்தினின்று இவ்விடத்திற்கு ஆறுபெருகி வருவதொழிய, இவ்விடத்தினின்று தங்களிடத்திற்கு இயற்கைவிதிக்கு மாறாகப் பெருகி வரவில்லையே. அப்படியிருக்க ஏன் என்மேற் பழிபோட்டு என்னைக் கொல்லாமற் கொல்லுகின்றீர்கள்.

இவ்வண்ணம் ஆட்டுக்குட்டி யுத்திபுத்திக்கு ஏற்கத் திருஷ்டாந்த பூர்வமாய் எடுத்துரைத்த உண்மையை மறுத்து எதிர்வார்த்தை சொல்ல ஓநாய்க்கு மனம் ஒப்பவுமில்லை, நா வழங்கவுமில்லை. ஆனதுபற்றி அது இந்த வழக்கை நிறுத்திவிட்டு வேறொரு வழக்குச் சொல்லி அதன்மேற் பழிபோட ஆரம்பித்தது.

ஓநாய்—நல்லது இது போகட்டும்; இப்பொழுது ஆறு மாசத்திற்குமுன் நீ என்பேரில் நிந்தைசொல்லி என்னைத் தூற்றியதாக நம்பத்தக்க சத்தியவந்தர்களால் எனக்குக் கேள்வி. இதுவரையில் நீ என் கண்ணுக்கு எதிர்படவில்லை. இன்று தற்செயலாய் உன்னைக் கண்டதினால் உன் வாய்மதம் அடங்க உனக்குச் சிட்சைசெய்து புத்தி வருவிக்கத்தான் வேண்டும். இதற்கு என்ன சொல்லுகிறாய்?

முன்கேட்ட கேள்வியிலும் இந்தக் கேள்வி அபத்தமும் அசாத்தியமுமாயிருப்பதினால், பாம்பின் வாயில் அகப்பட்ட தேரையைப்போல நடுநடுங்கிய ஆட்டுக்குட்டி சொல்லியது:—

ஆட்டுக்குட்டி—பிரபு! எனக்குத் தீரா ஆபத்து நேர்ந்திருக்கின்ற இத்தருணத்தில் என்னைச் சீறிச் சினந்து பேசாமல், நான் சொல்லும் எளிய வார்த்தையைப் பொறுமையாய்க் கேட்டு, என் சொல்லையும் தங்கள் சொல்லையும் மனத்தராசில் தூக்கிப்பார்த்து, தோஷியென்று கண்டால் எனக்

குத் தகுந்த சிட்சை செய்யுங்கள். சொல்வார் சொன்னும் கேட்பார்க்கு புத்தி யில்லையா? நான் பிறந்து இன்னும் ஆறுமாசம் ஆகவில்லையே. நான் தங்கள்மேல் தூறு சொல்லியது வாஸ்தவமானால் நான் பிறக்குமுன் சொல்லி யிருக்கவேண்டும். அதைக் கேட்டவர்கள் யார், என்னைக் கண்டவர்கள் யார், கண்டது எங்கே? சீமானே, நாலையும் நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

என்னதான் நியாயம் எடுத்துக்காட்டினும், மெய்யைப் பொய் வெல்லாதென்று ஐயமற உள்ளந் தேறக் கண்டறிந்த ஓநாய்க்கு ஆட்டுக்குட்டியின்மேல் கோபத்தீ பற்றி எரிய, அது சொல்லியது :—

ஓநாய்—ஆனாலும் என்ன, பேதம் ஒன்றும் இல்லை; என்னைப் புறங்கூறினவன் நீ அல்லாவிட்டால், உன் அப்பன், சிற்றப்பன், பெரியப்பன், உன் பந்துக்களில் எவனாவது என்னைத் தூற்றியிருப்பான். நீயானாலும் என்ன, உன் உற்றார் உறவினரில் ஒருவனானாலும் என்ன, இரண்டும் ஒன்றுதான்.

இவ்வண்ணம் அந்த வல்வாயனாகிய ஓநாய் ஊர் உலகத்திற்கு ஒருவிதத்திலும் ஏற்காத நியாயம் எடுத்துச் சொல்லி, பாவம் பழி அறியாத திக்கற்ற ஆட்டுக்குட்டியை ஒரு பாய்ச்சலிற் பாய்ந்து இறுகக் கவ்வித் தூக்கிச் சுழற்றி விசையாகத் தரையில் வீசிவிட்டு, அப்புறம் கடித்து உறுப்புறுப்பாகக் கிழித்துப் பட்சித்தது.

மனுஷரிற் பரம துஷ்டருக்கும் தாம் நல்வழியில் நடந்து சற்குணரா யிருக்கவேண்டுமென்று ஐயமறத் தெரியும். அதனால் அவர்கள் அதிக்கிரமித்து நடக்கும்பொழுது அவ்வதிக்கிரமத்தைக் கிரமமெனத் தோற்றுவிக்க யாதாயினும் உபாயம் உண்டுபண்ணத் தம்மால் ஆமளவிற்கு எத்தனிப்பார்கள்.



## 7. முதலை

முதலை ஆசியா ஆபிரிக்கா எனும் கண்டங்களில் உஷ்ண மதிகரித்த இடங்களிலுள்ள பெருநதிகளில் சஞ்சரிக்கும். அது நிலத்திலும் நீரிலும் வாழும் இயற்கை உள்ளது. இந்த இயற்கையுள்ள பிராணிகளுக்கு பூஜலசரம் எனப் பெயர் உண்டு. பிரமாண்டமான பல்லியின் சாயலுள்ள முதலை சிறுபான்மை இருபத்தைந்து அடிவரையும் நீண்டு பருத்திருக்கும். அதன் நிறம் புகர் நிறம். தடித்துக் கற் போலக் கடினமாகி அதன் முதுகெங்கும் நிறைந்துள்ள செதிள் துப்பாக்கிக் குண்டுக்கு எளிதில் அசையாது. அதிற் படும் குண்டு அதைத் துத்தெரித்துப் போவதொழிய, அதில் ஏறுவது அரிது. இந்தக் காரணத்தால் முதலைக்கு வன்மீன் எனவும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது. முதலைக்கு மேல்வாயிலும் கீழ்வாயிலும் கூர்மையான பெரும் பற்கள் அநேகம் இரண்டு நிரையாக முளைத்திருக்கும். நீரில் வாழும் மச்ச ஜாதியைப்போல எளிதாக நீந்தும்படி முதலையின் வால் இருபக்கமும் தட்டையாயிருக்கின்றது.

பெண்முதலை ஆற்றங்கரை மணலிலும் மடுக்கரை மணலிலும் இடுகிற முட்டை வாத்துமுட்டையிலும் சற்றுப் பெரிது. அது அம்மணலிலிருந்து ஆதித்த உஷ்ணத்தாற்

குஞ்சு பொரிக்கும். ஓடு வெடித்து முட்டைக்குள்ளிருந்து வெளிப்படும் அந்தக்ஷணமே இளமுதலைகள் வழிகாட்டுவார் எவருமின்றி ஜாதி இயற்கையால் : தண்ணீர்க்கரையை நாடிப் போகும். மழை பெய்யாமல் ஆறு குளம் ஏரிகள் அனைத்தும் வற்றும் வறட்சிக்காலத் திற்பெரும்பாலும் முதலைகள் எத்தனை நாட்சென்றும் மழை வருஷிக்கிறவரையில், கல்லுக்குள் தேரைபோல, சேற்றுக்குள்ளே புதைந்து மறைந்திருக்கும்.

முதலை முக்கியமாய்ப் புல் பூண்டு செடி மிகுந்து உள்ள சேறும் சதுப்புமான தரையையும், நாட்டகத்தில் ஏரிகுளங்களையும் தேடிப்போய்ச் சஞ்சரிப்பது அதன் சுபாவம். அது ஆடு, மாடு, மான், மரை முதலிய ப்ராணிகள் தண்ணீர் குடிக்க வரும் துறைக்குக் கிட்ட இரைதேடிக் காத்திருக்கும் பொழுது நீர்முகத்திற் சிறிதும் அசையாமற் கட்டைபோலக் கிடக்கும். இப்படிக் கிடந்து சமயம் கண்டு அசதியில் ஒரு தாண்டிற் சென்று ஆடோ, மாடோ, மானோ, மரையோ அகப்பட்டதைக் கவ்விப் பிடித்துத் தண்ணீருக்குள்ளே வெகு விசையாய் இழுத்துக் கொண்டுபோகும். அது சிறுபான்மை நீர்க்கரைக்குச் செல்லும் சிறுவர் சிறுமியரைப் பிடித்துப் பட்சிப்பதும் உண்டு. ஆனதுபற்றி, முதலைக்குச் சிசுமாரம் எனவும் பெயர். பெருநதிகளில் மிதக்கும் பிணங்கள் அழுகி உருக்குலைந்து தண்ணீர் கெட்டுப்போவதற்குமுன் அப்பிணங்களை முதலை பட்சித்து அந்தப் பீடையைத் தவிர்ப்பதனால், அது மனுஷருக்கு ஒருவிதத்தில் உபகாரியாகின்றதெனச் சொல்லலாம். முதலை சாதாரணமாய்த் தின்று பிழைக்கும் ஆகாரம் மச்சம்.

முற்காலத்தில் எண்ணிறந்த முதலைகள் எகிப்து தேசத்தில் விர்த்தியாயின. சில இடங்களில் மனுஷர் முதலையைத் தெய்வமென்று பக்தி பூர்வமாய்ப் பூசித்தார்கள். அவர்கள் அம் முதலைகளுக்கு அறுசுவை அமைந்த உண்டிகளைக் கொடுத்து,

ஆபரணாதிகள் தரிப்பித்து, மாலைகள் சூட்டி அலங்கரித்து எழுந்தருளப்பண்ணி உற்சவம் நடத்திவந்தார்கள். வேறு சில இடங்களில் மனுஷர் முதலைகளைக் கொன்று தின்றார்கள்.

இத்தேசத்திற் சில சமயங்களில் ஆறு குளங்களில் இறங்கி நீராடும் ஸ்திரீ புருஷ பால்யரைத் தண்ணீருக்குள்ளே மறைந்திருக்கும் முதலைகள் அசதியிற் கிட்டிக் கவ்வி இழுத்துக்கொண்டுபோய்ப் பட்சிப்பதும் உண்டு.

## 8. மகாப் பிரதிநிதி

கடவுள் மண்ணுலகில் வாழும் மனுக்குலத்தார் அனைவரையும் நடுத்தீர்க்கும் மகா பெரிய நியாயாதிபதி. சமஸ்த ஜனங்களும் அவரவர் நல்வினை தீவினையைக்குறித்துக் கணக்கொப்புவிக்க அந்த நீதியதிபரின் நியாயசபை முன்னிலையில் தவறுமற் போய் நிற்கவேண்டும். பாவம் செய்த பாதகனைக் காலில் விலங்கிட்டுக் கட்டி இழுத்துக்கொண்டுபோய் நியாயாதிபதி சமுகத்தில் நிறுத்தும்பொழுது அச்சமற்று நாவெழுந்து வார்த்தைசொல்ல அவனால் முடியாது; வாய்திறவாதபடி திகில்பெருகி அவன் பல் கிட்டிக்கொள்ளும். தேவசன்னிதியில் அவன் தோஷியென்று ஏற்பட்டு நிற்பான்.

அந்த நியாயஸ்தலத்தின் மத்தியில் அவன் பட்சம் உத்தரம் சொல்ல ஒருவர் எழுந்து நிற்பார். அவர் பிதாவுடன் அவனுக்குப் பிரதிநிதியாக நின்று பரிந்துபேசும் நீதிபராகிய இயேசுகிறிஸ்து.

நியாயாதிபதியாகிய கடவுள் கேட்கும் கேள்வி,—'பாவியே! உன் பெயரிற் சாட்டிய குற்றத்திற்கு நிவிர்த்தியாக ஏதேனும் நியாயம் சொல்ல இருக்கின்றதா?' பாவி சொல்லும் உத்தரம்,—'யேகோவாவே, ஜீவனுள்ளோரில் ஒருவனும்

உமது சமுகத்திற் குற்றமற்றவனுயிரான்; ஆதலால் உமது அடியானை நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தாதிரும்.'

பயங்கரமான தண்டனைத் தீர்ப்பைக் கடவுள் நிறைவேற்ற எத்தனிக்கையில், பிரதிநிதியாகிய இயேசுரட்சகர் எழுந்து நின்று சொல்வது,—'நியாய வரம்பு கடந்து நடப்பவர்கள் படவேண்டிய வேதனையை நீதிபரனுகிய நான் பட்டு அனுபவித்தேன். பாவி கைக்கொள்ளாது மீறிய கற்பனையை நான் கைக்கொண்டேன். அவன் பாவம் பழிகள் என்மேற் சுமத்தப்பட்டன. நான் எனது உதிரத்தைப் பாவமீட்சிக் கிரயமாகக் கொடுத்துத் தீர்த்தேன்.

மகத்துவம் உள்ள நியாயாதிபதி சொல்வது,—'இம்மாத்திரம் போதும்! தண்டனைத் தீர்ப்புப் பெற்ற குற்றவாளியின் காலில் இட்ட தளையைக் களையுங்கள்; அவனுக்காக இயேசு பாடுபட்டதினிமித்தம் நாம் அவனை 'நிரபராதி' என்று தீர்க்கின்ேறாம். அவனை விட்டுவிடுங்கள்; ஏனெனில், கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு இல்லை.'

பாவி செய்த பாவம் பழி யாவையும் இயேசுரட்சகர் மூலமாய்க் கடவுள் இவ்வண்ணம் கருணைபுரிந்து மன்னித்து விடுகிறார். நாமும் தேவனுடைய நியாயாசனத்திற்குமுன் போய் நிற்கவேண்டும். நாம் இப்பொழுது இயேசுநாதரை நமது பிரதிநிதியாகும்படி இரந்து கேட்டு, நமக்குப் பாவரட்சிப்பு அவர் ஒருவரால்மாத்திரம் உண்டாமென்று விசுவாசிக்கக்கடவோம்.

## 9. நோய்

'நோயற்ற வாழ்வே வாழ்வு, குறையற்ற செல்வமே செல்வம்.' செல்வத்துளெல்லாம் பெருஞ்செல்வம் தேக

ஆரோக்யம். நாம் ஆரோக்கியமாய் இருக்கும்பொழுது நமது சொந்தக் கருமத்தை முடிக்கவும் பிறருக்கு நன்மை செய்ய வும் வல்லவர்களாவோம். வியாதி கண்டு நமது பலம் ஒடுங் கும்பொழுது நம்மைச் சூழ்ந்துள்ள பெற்றூர் உறவினர் அய லார் அனைவருக்கும் எடுப்பதற்கரிய சுமையாகிப் பூமிக்குப் பாரமாவோம். ஆனதுகொண்டு நமது தேகசுகத்தைப் புத்தி கெட்டுப் போக்கடிக்காமல் தகும் வகையனைத்தையும் சூழ்ந்துசெய்து காத்துக்கொள்வது நமது கடனே.

பிணி நிர்நிமித்தமாகத் தானே உற்பத்தியாகிறதென்றும் நம்மில் வெறுப்புற்ற துஷ்டதேவதைகளால் வருகிறதென்றும் பேதைகள் வெகுபெயர் வீணே நினைத்திருக்கின்றூர்கள். காரணமின்றி நமக்கு ஒருபொழுதும் வியாதி உண்டாகிற தில்லை. வியாதியைத் தோற்றுவித்த காரணம் இன்னதென்று நமக்குத் தெரியாதிருப்பினும், வைத்தியஞ்செய்து பயின்று வியாதியின் உற்பத்தியை அநுபவசித்தமாய்க் கண்டறிந்த நிபுணர்கள் பெரும்பாலும் தெரிந்து சொல்லமாட்டுவார்கள். கொதிக்கிற நீரிற் கை விட்டால் கை வெந்துபோம். நாம் நஞ் சைத் தின்றூல் நஞ்சு நம்மைக் கொல்லும். பெரும்பாலும் நமது அஜாக்கிரதையினூலேயே வியாதி உண்டாகின்றது. நையக் கனியாத செங்காயையாவது, எளிதில் ஜீரணிக்காத வேறு யாதாயினு முணவையாவது தின்றூல், நமது வயிற்றிற் கோளாறுண்டாகும். ஈரவஸ்திரத்தை உடுத்திருந்தால் ஜல தோஷம் உண்டாகும். சதுப்பு நிலத்திற் சரக்கும் நீரில் ஸ்நா னபானஞ்செய்தால் ஜுரம் கண்டு வருந்துவோம். பிணியைத் தோற்றுவிக்கும் காரணங்கள் இன்னுமநேகம் உண்டு.

அம்மை ரோகத்தின் விதையை மாரியம்மன் என்னும் தேவதை விதைக்க, அது முளைத்து மனுஷரை மடிவிக்கிற தென்றும் இந்துக்கள் சிலர் எண்ணிக்கொள்ளுகிறூர்கள். பைசாசங்களின் சினத்தால் வாந்திபேதி உண்டாகிறதென்று

வேறுசிலர் சொல்வார்கள். இப்படி எண்ணுவது சுத்த விபரீதம். மாரியம்மனென்று ஒரு தேவதை ஒருபோதும் இல்லை. வாந்திபேதி முதலிய பெருவாரிநோய்கள் துஷ்ட தேவதைகளால் உண்டாகின்றனவென்பது சுத்த அபத்தம்.

தெய்வமறியாமலும், தேவ உத்தரவில்லாமலும் அணுவும் அசையாதென்பது திண்ணம். ஆயினும் நமது பரமபிதா செய்வது எதையும் எப்பொழுதும் புத்தி பூர்வமாகவும் உள்ளன்புடனும் செய்துவருகிறார். ஒருநாளும் அவர் நம்மை நிர்நிமித்தமாகத் தண்டிக்கிறதில்லை. நமக்குப் பிணி உண்டாம்பொழுது தீரத்தெளியச் சிந்தித்துப் பார்ப்போமானால், யாதாயினும் ஒருவிதத்தில் அதிக்கிரமித்து நடந்ததனாலேயே அது உற்பத்தியானதென்று பெறும்பாலும் காண்போம். ஆதலால், சமஸ்த ஜனங்களும் வியாதி வருமுன்னே அதைத் தவிர்த்துத் தேகசுகத்தைக் காப்பாற்றிக்கொள்ளத்தகும் வகையைக் கண்டறிந்து செய்ய எத்தனிக்கவேண்டும். ‘வெள்ளம் வருவதற்கு முன்னே அணை கோலிக் கொள்ள வேண்டும்’ என வழங்கிவரும் முதுமொழியால் நமக்கு இவ்விஷயத்திற்கு வேண்டிய புத்தி எளிதில் உண்டாகலாம்.

## 10. இலாபத்திற் பாதி எனக்குக் கோடு

இத்தாலியா தேசத்தில் வாழ்ந்த மகாப்பிரபு ஒருவர் மங்கல மணவிருந்து சம்பிரமமாகச்செய்து கொண்டாட எத்தனித்து, அதற்கு வேண்டும் விதம்விதமான மதுரமுள்ள போஜனபதார்த்தங்கள் அனைத்தும் அங்கங்கிருந்து அழைப்பித்தார். மச்சம் ஒன்றுமாத்திரங் கிடைக்கவில்லை. கடல் அலைபுரண்டு பொங்கிக் கொந்தளித்துக் கோஷித்ததனாற் செம்படவர் மீன் பிடிக்கப்போவது அசாத்தியமாயிருந்தது.

ஆனால் விருந்துத் தினத்தினன்று காலையில் ஏழைச் செம்படவன் ஒருவன் பெரிய உல்லமீன் ஒன்று பிடித்து, பிறந்த நாள்முதல் அதுவரையில் தனக்கு என்றும் இல்லாத அதிஷ்டம் வலிய வந்தடைந்ததை எண்ணி மனம் பூரித்து, அம் மீனுக்கு மேற்படி குலமகனன்றி அருமை அறிந்து கிரயம் கொடுக்கத்தக்கவர்கள் இல்லையென்று தீர்மானித்து அக்குல மகனுடைய வாசஸ்தானத்திற்கு அதைச் சுமந்துகொண்டு சென்றான். அவன் பிடித்த மச்சத்தின் அருமை பெருமை 'உள்ளதை விற்று உல்லத்தைக் கோள்' என்னும் பழமொழியால் விளங்கும். சமயோசிதமாகப் போய்ச் சேர்ந்த மாதுரியமான அந்த மச்சத்தைக் கண்டவுடன் மாளிகையிலுள்ள விருந்தினர்க்கு மிகு மகிழ்ச்சி யுண்டாயிற்று. காவலாளர் மேற்படி வலையனைப் பிரபுவின் சமுகத்திற் கொண்டுபோய் விட்டார்கள். அவன் அம்மீன் சுமையை இறக்கித் தரையில் வைத்து, அன்றையதினமே தன்னைப் பிடித்த கலி தீருமென்று பிரபு முகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தான். பிரபு 'இம்மீனுக்கு விலை என்ன சொல்லு? கேட்டவிலை தடையின்றிக் கொடுப்போம்' என்று சொல்ல, செம்படவன் 'என் முதுகில் ஒரு அடியும் குறையாமல் எண்ணி நூறு அடி அடிப்பது இந்த மீன் விலை' என்று உத்தரம் சொன்னான்.

அவன் சொன்ன விலை அந்தச் சீமானுக்கு வெகு விநோதமும் விந்தையுமாயிருந்தது. அவர் அவனை அதட்டி, மதி குன்றிய உன்மத்தர் பேசுவதுபோல வியர்த்தமான வார்த்தைகளை உளறுதே; உற்று நினைந்து உள்ளது சொல்லு; நீ என்ன விலை சொன்னாலும் ஒரு காசுங் குறையாமற் கிடைக்கும் என்று திரும்பத் திரும்ப அவனைத் தூண்டியும், அவன் முன் சொன்ன சொல்லையே ஒருபிடியாய்ச் சாதித்தான்; பிரபு இனி அந்தப் பித்தனுடன் பேசிப் பயனில்லையென்று கண்டு, வேலைக்காரனை வரவழைத்து, 'அற்புதமாய்ச் சமயத்

தில் கண்ணுக்குமுன்னே வந்து சேர்ந்த இவ்வரும்பொருளை எவ்விதத்திலும் வாங்கத்தான்வேண்டும். அது இல்லாமல் தீராது. இவன் கேட்ட விலையைத் தாராளமாய்க் கொடுத்து விடு; ஆனாற் பலமாயடிக்காதே. எனது முன்னிலையில் இவனை அசையாது நிற்கச்சொல்லி அடி' என்று திட்டஞ் செய்ய, வேலைக்காரன் அடிக்க ஆரம்பித்து ஐம்பது அடி அடிக்கிறவரையிற் செம்படவன் வாய் திறவாது நின்று, ஐம்பத்தோராவது அடி அடிக்கப் பிரம்பு சுழற்றவும், சடு தியாய்ப் 'பொறு பொறு! பங்காளி ஒருவன் இருக்கிறான், என் பங்கு வந்துவிட்டது, அவன் பங்கை அவன் முதுகில் ஒப்புவித்துவிடு' என்று மொழிந்தான். அதுகேட்டுக் குலத் திற் பிறந்த அந்தலட்சப்பிரபு 'மீன் பிடித்து விற்றுப் பிழைக் கும் இவன் வாய்ப்பிறப்பெல்லாம் கேட்பவர்களுக்கு வெகு விநோதமாயிருக்கின்றதே, இது என்ன மாயம்' என்று தமக் குள்ளே நினைந்து, 'உன் பங்காளி பெயர் என்ன சொல்லு, நொடிக்குள்ளே ஆள் அனுப்பி அவனை வரவழைப்போம்' என்று கேட்க, செம்படவன் 'எஜமானே, எனது பங்காளி வெகுதூரந் தொலையில் இருப்பவன் அல்ல, தோட்டத்தின் வாசலில் நிற்கின்ற துவாரபாலகன்தான். அவன் இந்த மீனைக் கண்டபொழுது என்னைத் தடுத்து, இலாபத்திற்பாதி எனக்குக் கொடு, கொடுப்பதாக வாக்குறுதி சொன்னால் உட் செல்ல விடுவேன் என்று என்னை நெருக்கிக் கேட்க, அவன் கேள்விப்படி மீன் விற்றுத் தேறும் இலாபத்திற் பாதி கொடுப் பேன் என்று வாக்குத்தத்தஞ் செய்துவந்தேன்' என மறு மொழி பகர்ந்தான்.

அதுகேட்டு, பிரபு 'ஓகோ! மெத்த நன்றாயிருக்கிறது' என்று முகங்கடுத்து மொழிந்து, துவாரபாலகனைப் பிடித்து வரச்சொல்லி ஐம்பது அடி அந்தக்ஷணமே அடிப்பித்துச் சேவகத்தினின்று நீக்கி அனுப்பிவிட்டார். அதன்பின், செம்

படவனுக்கு அவ்வுசிதமான மச்சத்திற்காகத் தகுந்த விலை கொடுத்து உபசார வார்த்தை சொல்லி அனுப்பினர்.

பெரிய மனுஷருடைய சேவகத்தில் அமர்ந்திருப்பவர்கள் அன்றன்று தங்கள் தங்கள் எஜமான்களிட்ட அற்ப கூலி வேலை செய்யும் ஏழைகளை வெருட்டிப் பாதிக் கூலியை அநியாயமாய் அபகரித்துக்கொள்வது வழக்கமே. ஆயினும், இப்படிச் செய்வது தோஷம். நீசரன்றி, மற்றவர்கள் இவ்வகையான தகாத அக்கிரமத்திற் குடன்படார்கள்.



11. பரிகாசப் பட்சி

பரிகாசப் பட்சி என்னும் இவ்விநோத பறவை அமெரிக்காவிற் சாதாரணமாய்க் காணப்படும். அது தான் கேட்கிற ஒவ்வொரு சத்தத்தைப்போலவும் கத்தும் சமர்த்

துடையபதாதலால் அதற்கு அப்பெயருண்டாயிற்று. அது சற்றேறக்குறைய ஒரு புறுவளவு பருமனுடையது. அதன் நீளம் ஏறக்குறைய ஒன்பது அங்குலம். அதன் மேற்புறம் கருமை கலந்த கபிலநிறம்; வாலும் சிறகுகளும் ஏறக்குறையக் கறுப்பு வர்ணமாயிருக்கும். கீழ்ப்புறம் மங்கலான வெண்மை நிறம் பொருந்தியிருக்கும். அமெரிக்க இந்தியர் அதை 'நானூறு நாவுள்ள பட்சி' யென்று சொல்லுவார்கள்.

அது தான் பிறந்து வளர்ந்த தோப்பிலுள்ள உயர்ந்த செடியின் உச்சியிலாவது மரக்கிளையிலாவது ஏறிக்கொண்டு, காலையிற் பனிபெய்யும்போது கிழக்கு வெளுக்கும் நேரத்தில் கீதம் பாடும். மற்ற அநேக பட்சிகளின் சத்தத்தால் காடு தொனித்துக்கொண்டிருக்க இதினுடைய இராகம் அவைகளெல்லாவற்றிற்கும் மேலாக எழும்பும். அதின் உற்சாகமும் உல்லாசமுமான ஆட்டம் கண்ணைக் கவர்ந்துகொள்ளுகின்றது. அது உற்சாக சந்தோஷத்துடன் சுற்றிச்சுற்றிப் பாடி, தன் பாட்டின் சத்தம் உயரும்போது தானும் மரத்தில் உயர ஏறி, அந்தச் சத்தம் குறையக் குறையத் தானும் கீழே இறங்கிவிடும். இப்படி அது முயற்சியாயிருக்கையில் சமீபத்தில் நிற்கும் குருடன் எவனும் பறவைகள் தங்களில் எது சமர்த்துள்ளதென்று பரிசோதிக்க எல்லாம் ஒன்றாய்க் கூடிக்கொண்டதாகவும், ஒவ்வொன்றும் தன் திறமையைக் காட்டப் பிரயாசப்படுகிறதாகவும் உத்தேசிப்பான். ஏனெனில் அது மற்றப் பட்சிகள் பாடுவதுபோற் பாடுவதில் எவ்வளவும் குறைவுபடாது. அது அநேக தடவைகளில் வேட்டைக்காரனை வஞ்சித்து அவனுக்குச் சில மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் பட்சி எவ்விதமாய்ப் பாடுமோ அவ்விதமாய்ப் பாடி அது எங்கே இருக்கின்றதென்று அவன் தேடித்திரியும்படி செய்யும். இந்த ஆச்சரியப்படத்தக்க பரிகாசப் பட்சி

யினால் பறவைகளும் அடிக்கடி ஏமாற்றப்பட்டு, அது இடும் சத்தம் தங்கள் ஜோடிப் பட்சியின் சத்தமேயென்று எண்ணி மயங்கிவிடும். சிலவேளைகளில் அது இடும் சத்தத்தைக் கேட்டு அச்சத்தம் இராசாளியின் சத்தமென்றெண்ணி பட்சிகள் அடர்ந்த ஆரணியத்திற்குள் தீவிரமாய்ப் பறந்துபோய் ஒளித்துக்கொள்ளும்.

பரிகாசப் பட்சியைக் கூண்டில் அடைத்து வைப்பதால் அதன் பலமாவது ஊக்கமாவது கொஞ்சமாயினும் குறைவடைகிறதில்லை. அது பழக்கப்பட்டு வீட்டுப் பட்சியாயிருக்கும்போதும் பாடத் தொடங்குமாயின் அதன் பாட்டைக் கேட்டுச் சந்தோஷப்படாமல் அதன் சமீபத்தில் நிற்பது கூடாது. அது நாய் வரும்படி சீழ்க்கை வலிக்கும். அப்போது நாய் உடனே எழுந்து வாலை ஆட்டிக்கொண்டு தன் எஜமானைச் சந்திக்க ஓடும். அது காயப்பட்ட கோழிக் குஞ்சைப்போல் கீச்சிடும். அப்போது பெட்டைக்கோழி தன் சிறகைத் தொங்கவிட்டு, முடியைச் சிலிர்ப்பி, கொக்கரித்துக்கொண்டு, தன் குஞ்சுகளைப் பாதுகாக்கத் தீவிரமாய் ஓடும். அது சரியாய் நாய் குலைக்கிறதுபோலவும், பூனை உறுமுகிறதுபோலவும், கைவண்டி சக்கரம் கீச்சிடுகிறதுபோலவும் ஒன்றின்பின் ஒன்றாய் அதிதீவிரமாய்ச் சத்தமிடும். அது தன் எஜமான் தனக்குக் கற்றுக்கொடுத்த இராகம் திக நீளமானதாயிருந்தாலும், முழுவதையும் நேர்மையாய் ஒப்புவிக்கும். அது சாமார்த்தியமாயும், நேர்த்தியாயும் கானரி என்னும் பட்சி பாடுமிராகத்தைப்போற் பாடி நைற்றிங்கேலைப்போல் சீழ்க்கை வலிப்பதால் அப்பட்சிகள் தங்களுடைய தாழ்வை உணர்ந்து மிக்க அவமானமடைந்து முற்றிலும் பேசாமலிருந்துவிடுமாம். அதுவோ தான் அவர்களைத் தோல்வியடையச்செய்து ஜயமடைந்தாற்போல் தான் செய்தவைகளை மறுபடியும் செய்யும்.

பரிகாசப் பட்சி தன்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டும் நேரமுழுவதும் தன் சிறகையும் வாலையும் விரித்து, உற்சாக சந்தோஷத்துடன் அங்குமிங்கும் பாய்ந்து பாடுகிறது மாத்திரமல்ல, தன் பாட்டுக்கேற்கத் தாளம் போட்டு நடனமாடுகிறதுமுண்டு. காட்டுப்பட்சியாய் வனத்தில் வசிக்கும்போதும், பழக்கப்பட்டு வீட்டில் வசிக்கும்போதும் அது இரவில் அமைதலான நேரத்தில், சந்திரோதயமானவுடனே தன் இன்பமான இராகத்தைத் தொடங்கி, அதியுசிதமான கீதத்தால் அயலக முழுவதும் ஆனந்தசாகரத்தில் மூழ்கச்செய்யும்.

பரிகாசப் பட்சி அடைகாக்கும்போது மனுஷனாவது, நாயாவது, வேறு எந்த மிருகமாவது கூட்டிற்குச் சமீபத்திற் சென்றால் அது சிறிதும் வித்தியாசமின்றி மிகுந்த தைரியத்துடன் தாக்கிவிடும். அது முக்கியமாய்ப் பகைக்கும் வஸ்து கரும்பாம்பு. அந்தப் பாம்பு அதன் குஞ்சுகளையாவது, முட்டைகளையாவது, கவர முயன்றால் அது பரிகாசப் பட்சியினால் கொரோமாய்த் தாக்கப்படுகிறது. அந்தப் பட்சி பாம்பு தன்னைக் கடிக்கத்தக்கதாகச் சமீபத்திற் செல்லாவண்ணம் அதைத் தலையில் பலமாய்க் கொத்தும். அப்பாம்பு ஓடப் பிரயாசப்படும்போது அந்த நிற்பயமான பட்சி அதைப் பின்தொடர்ந்துபோய்க் கொத்திக் கொன்றுவிடும். பின்பு அது மரத்திற்குத் திரும்பவும்பறந்துபோய், எல்லாவற்றிலும் உயரமான கிளையிலிருந்துகொண்டு ஜயகீதம் பாடும். என்ன விநோதமான பட்சி இது!

## 12. அர்த்தநாசஞ்செய்த புத்திரனைக்குறித்துச் சொல்லிய உவமை

ஒரு மனுஷனுக்கு இரண்டு புத்திரர் இருந்தனர். அவர்களிற் கனிஷ்டன் தகப்பனை நோக்கி, 'பிதாவே, பொரு

ளில் எனக்கு வரும் பங்கைப் பாகித்துத் தரவேண்டும்’ என்று கேட்க, அவன் தன் வசத்தில் உள்ள சொத்தெல்லாம் புத்திரருக்குப் பங்கிட்டான். சில தினஞ்சென்று இளய மகன் தன் பங்காகக் கிடைத்த சொத்தைச் சேர்த்துக்கொண்டு தூரதேசத்திற்குப் புறப்பட்டுப் போய், துஷ்டருடன் தோழமை கூடிப் பொருளெல்லாம் செலவழித்து வெறுங் கையனானான். அங்கு அவன் தரித்திர தசை அடைந்து தாங்கரிய உபத்திரவம் மிஞ்சியதனால் அங்குள்ள ஒருவனைத் தஞ்சமென்றடைய, அவன் இவனைத் தன் வயலில் பன்றிமேய்க்க அனுப்பினான். வயிற்றுக்கொதிப்பு அடங்க அந்தப் பன்றி



கள் தின்கிற தவிட்டையாவது தின்று பிழைக்க அவன் வாஞ்சைகொண்டும், அதை ஒருவனும் அவனுக்குக் கொடுக்கவில்லை.

பிற்பாடு அவ்விளைய மைந்தன் புத்தி தெளிந்து ஆ! நான் இப்படி இராப்பட்டினி பகற்பட்டினியிருந்து உடல் உலர்ந்து வருந்த, என் பிதாவினிடத்தில் எத்தனை எத்தனை கூலிக்காரருக்கு வேண்டுமளவிற்குமேல் ஆகாரம் கிடைக்கின்றது என்று எண்ணினான். எண்ணியதன்மேல் ‘நான்

எழுந்து என் பிதாவினிடத்திற்குப் போய், பிதாவே, தேவனுக்கும் உமக்கும் விரோதமாகப் பாவஞ்செய்தேன். இனி உமது புத்திரனென்று அழைக்கப்பட நான் பாத்திரன் அல்ல என்று சொல்வேன்' என மொழிந்து வீட்டுக்குத் திரும்பிப் போனான். அவன் அதிதூரத்தில் வருகையிற் பிதா அவனைக் கண்டு உள்ளம் உருகி ஓடிப்போய்க் கழுத்தைக் கட்டி முத்தஞ்செய்தான். அன்றியும், தன் பணிவிடைக்காரரை நோக்கி 'நீங்கள் உசிதமான வஸ்திரத்தைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி அறுசுவை உண்டி சமைத்துக் கொடுங்கள். என் மகனாகிய இவன் மரித்தான், திரும்பவும் பிழைத்திருக்கிறான்; காணாமற்போனான், இப்பொழுது காணப்பட்டான்' என்று மனங்கொள்ளாச் சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டாடினான்.

இது இயேசுகிறிஸ்து சொன்ன ஒரு உவமையின் சுருக்கம். கடவுள் பரமண்டலத்தில் உள்ள நமது பிதா. மேற்குறித்த தந்தை சொல்லைக் கேளாத மைந்தனைப்போல நாமும் அவருடைய திருச்சன்னிதியைவிட்டு வெகுதூரம் போய் நெறி விலகிப் பாவவழியில் நடந்துவருகிறோம். புத்தி தெளிந்து திரும்பிவரும்படி அவர் நம்மைப் பரிவு கூர்ந்தழைக்கிறார். நாம் பாவ அறிக்கை செய்து இயேசுகிறிஸ்துவின் திருநாமத்தை முன்னிட்டு மன்னிப்புக் கேட்டு பரிசுத்த தேவ ஆவியின் சகாயத்தால் இனிமேல் அதிக்கிரமிக்காமல் சொற்கேட்டு நடக்கவும், உள்ளன்பு கூரவும் வருந்தி எத்தனிக்கக் கடவோம். கடவுள் நம்மைக் கருணைகூர்ந்து அங்கிகரித்து, நமக்குச் செல்வம் மிகுந்த சிறந்த வரங்களைத் தந்தருள்வார்.

## 13. மோசம் நாசம்

ஓர் குளத்திலுள்ள மீன்களையெல்லாம் தின்னவேண்டுமென்று ஆசைகொண்டிருந்த ஓர் கொக்கானது ஒருநாள் அக்குளக்கரைக்குச் சென்று வாடிய முகத்தோடு அங்கு நின்றுகொண்டிருந்தது. அவ்வேளையில் அக்குளத்திலிருந்த மீன்களிலொன்று அக்கொக்கைப் பார்த்து 'ஐயா! தாம் இவ்விடம் வந்து வாடிய முகத்தோடு நிற்பதற்குக் காரணமென்ன' என்று கேட்டது. உடனே வன்னெஞ்சனுகிய அக்கொக்கு பிரதியுத்தரமாக 'மச்சேந்திரரே! எனக்குற்ற விசனத்தை யான் என்னென்று எடுத்துரைப்பேன். நாளைய தினம் ஓர் வலைஞன் இங்குவந்து வலைவீசி இங்குள்ள மச்சங்களையெல்லாம் பிடித்துக் கொண்டுபோகத் தீர்மானித்திருக்கிறுன்; அதைக்கேட்டு என் மனம் மிகக் கலங்குகின்றது' என மொழிந்தது. கபடமற்ற அம்மீன் இதைச் செவியுற்று 'ஐயா! அக்கொடிய செம்படவன் இவ்விடம் வந்து வலைவீசி எங்களை அகப்படுத்துமுன் தாங்களே எங்களை இரட்சிக்கவேண்டும்; ஆதலால் தாங்கள் தயைகூர்ந்து ஏதாவது உபாயம் சொல்லவேண்டும்' என்று மிகப் பணிவாய் வேண்டிக்கொண்டது. கொக்கு 'அப்படியே ஆகட்டும், நான் சொல்லுகிற யோசனைப்படி சிறிதும் தவருமல் நடக்கவேண்டும். அவ்வாறு நீரும் உமது பரிவாரத்தவர்களும் நடப்பீர்களானுல் உங்களைச் செம்படவன் கையிலிருந்து தப்புவிப்பேன். ஜீவரட்சை செய்வதில் எனக்கு வெகு பிரீதி. ஆதலால் உங்களை ஒவ்வொருவராக என் சொண்டினுல் தூக்கி எடுத்துக்கொண்டுபோய்ச் செம்படவர் கண்ணுக்கெட்டாத தூரத்திலேயுள்ள ஓர் தாமரைத் தடாகத்திற் சேர்ப்பேன். அங்கு நீங்கள் சுகமாய் வாழ்ந்திருப்பதுமன்றி என்னையும் ஜீவகா

ருண்யனென்று புகழ்ந்து போற்றுவீர்கள்' என்றது. இதற்கு அம்மீன்கள் உடன்பட, கொக்கானது அவைகளை ஒவ்வொன்றாய்த் தூக்கி எடுத்துச் சென்று தன்வயிறுகொண்ட மட்டும் புசித்து எஞ்சியவற்றை ஓர் பெரும் பாறையின்மீது உலரவைத்தது. இவ்வாறு ஒவ்வொன்றாய் அக்குளத்து மீன்களிற் சிலவற்றைத் தொலைத்த பின்னர் அம்மீன்களின் நண்பனாய் அங்கு நெடுநாள் வசித்துக்கொண்டிருந்த ஓர் நண்டின் முறை வந்தது. கொக்கானது ஆகாயமார்க்கமாய் நண்டைத் தூக்கிக்கொண்டு பறந்துபோகையில் வழியில் மீன் முட்கள் சிந்திக்கிடப்பதையும் கற்பாறைமீது மீன்கள் உலருவதையுங் கண்டு தன்பாடும் இப்படித்தானாகும் என்றெண்ணிக் கிலேசங்கொண்டது. இதற்குள் கொக்கு ஓர் தடாகத்திற்குச் சமீபமாய் வருவதைக்கண்டு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொக்கின் கிரீவத்தைத் தன் கூரிய கொடுக்கினால் இருதுண்டாகத் துணித்துவிட்டுத் தடாகத்தில் வீழ்ந்து உயிர் பிழைத்தது. இவ்வாறு நண்டு தீர்க்காலோசனையோடு செய்த வுபாயத்தால் தான் உயிர் தப்பிப் பிழைத்ததுமன்றி, அக்குளத்தில் மீந்திருந்த மீன்களும் உயிர் பிழைத்தன. கெடுவான் கேடு நினைப்பான். எவனொருவன் மற்றவர்கட்கென்று குழி வெட்டுகிறானோ அதில் அவனே வீழ்ந்து அழிவான். ஆதலால் நாம் இக்கொக்கு செய்தது போல ஒருவருக்கும் மோசம் செய்தல் ஆகாது. அவ்வாறு செய்வோமாயின் நாம் நாசமடைவோமென்பது நிச்சயம்.

## 14. மூன்று தீமைகள்

இளைஞர் எல்லோரும் மிக வருந்தித் தவிர்க்கவேண்டிய தீமைகள் மூன்று. அவை துர்ச்சிந்தனை, துர்வசனம், துர்க்கிரியை.

துர்ச்சிந்தனையாவது மனதிற்குக் கடுவிஷத்திற்குச் சமானமாம். அது உள்ளத்திற் குடிகொண்டிருக்க இருக்க அதனால் விளையும் கெடுதி விர்த்தியாகும். சர்ப்பத்திர்ஷ்டியாவது, பித்தம்பிடித்த நாய்க்கடியாவது துர்ச்சிந்தனையிலும் பிராணனுக்கு அதிக நாசமல்ல. ஆனதுபற்றி உங்கள் உள்ளத்தினின்று துர்ச்சிந்தனைகள் அனைத்தையும் பற்றறத் தொலைவிக்க வருந்தி முயலுங்கள். அவைகளுக்கு அஞ்சி, அவைகளைத் தவிர்த்து, அவைகளுடன் எதிர்நின்று பொருதி, அவைகளுக்கு உங்களைத் தப்புவித்துக் காத்துக்கொள்ளும்படி தெய்வத்தைக் கருத்தூக்கூர்ந்து காதலித்துக் கெஞ்சி வேண்டிக்கொள்ளுங்கள்.

துர்ச்சிந்தனை சாதாரணமாய்த் துர்வசனத்திற்கு வருவழியாகும்; துர்வசனம் அதைக் கொண்டாடுபவனுக்குத் தீராப் பெருந்தொல்லையைத் தருவதற்கு ஐயமில்லை. நாம் கேட்கும் துர்வசனங்கள் நமது செவித்துவாரத்தின் வழியே நுழைந்து இதயத்திற் புகுந்து தேவ கற்பனைகளை மீறும்படி நம்மைத் தூண்டிவிடும். ஆகவே, துர்வார்த்தை உட்செல்லாவண்ணம் உங்கள் செவியை நன்றாய் அடைத்துக்கொண்டு, அது பேசுகிறவர்களைக் கண்டாற் பெருவாரிநோய்க்குப் பயப்படுவதுபோலத் திகிலெடுத்து நடுநடுங்கி ஓடித் தப்பிவிடுங்கள்.

துர்ச்சிந்தனையை அடுத்துவருவது துர்வசனம். இவை இரண்டையும் தொடர்ந்துவருவது துர்க்கிரியை. இம்மண்ணுலகில் எவரெவர்க்கும் முந்திப் பிறந்த சிறுவன் உள்ளத்

தில் ஒரே ஒரு துர்ச்சிந்தனை புகுந்த நிமித்தம் அவன் தன் சகோதரனைக் கொலைசெய்து பிராதுருகாதகனானான். உங்கள் நெஞ்சில் துர்ச்சிந்தனைகளை உட்செல்லவிடாது தடுத்துக்கொள்வீர்களானால் ஒருபொழுதும் உங்கள் வாக்கில் துர்வசனம் வாராது. இது திண்ணம். துர்வசனம் ஒன்றும் மொழியாதிருப்பீர்களானால் துர்க்கிரியை செய்யாமல் தப்பிக் கொள்வீர்கள்.

முதலிற் காணும் நெருப்புப்பொறியை முழுவதும் அவித்துப்போடுங்கள். அவித்தால் உங்கள் வீட்டை அக்கினிக் கண்டத்திற்குத் தப்புவிப்பீர்கள். ஆதியில் உங்கள் நெஞ்சிலுற்பத்தியாகும் துர்ச்சிந்தனையை முளையிலே நசுக்கிக் களைந்துவிடுங்கள். இப்படிச் செய்தால் துர்க்கிரியை ஒன்றும் நீங்கள் செய்யாதிருப்பீர்கள்.

நற்சிந்தனைகள் நன்மையான மற்ற அனைத்திற்கும் ஊற்றாயிருக்கின்றன. ஆதலால் உங்கள் நெஞ்சில் நற்சிந்தனைகளை அழியாத பெருஞ்செல்வப்பொருளாக அமைத்து வைத்துக்கொள்ளுங்கள். இந்த நற்புத்தியைத் தள்ளிவிடாது தழுவி நடப்பீர்களானால் துர்ச்சிந்தை, துர்வசனம், துர்க்கிரியை என்னும் கொடிய விக்கினங்கள் மூன்றும் உங்களைப் பீடிப்பதில்லை.

## 15. சிங்கம், கரடி, குள்ளநரி

ஒரு சிங்கமும் கரடியும் காட்டில் உலாவித் திரியும்போது வழியில் மான்குட்டி ஒன்று இறந்துகிடக்கக் கண்டு, தம்மில் எதற்கு அது உரியதென்று வழக்கிடத் தலைப்பட்டன. இவ்வழக்கை இருதிறமும் இணங்கி எவருக்கும் சொல்லாமல் தாமே தீர்த்துக்கொள்ள முடியவில்லை. 'துரும்பு பெருத்துத் தூணாற்போல' அற்ப விவாதம் வரவர

வளர்ந்து அவை இரண்டும் ஒருகை பார்க்கவேண்டுமென்று சண்டை தொடங்கின.

நடந்த சண்டை சாமானியமானதல்ல; நாழிகை ஏற அவை உக்கிராவேசத்துடன் பொருதி ஒன்றையொன்று கடித்துக் கிழித்தும், அடித்து மிதித்தும் வெகு தீங்கு விளைத்தன. அவை தமது கண்ணெதிரில் தெய்வச்செயலாக அகப்பட்ட அரும்பொருளைத் தீண்ட ஆற்றுமல் உதிரம்பெருகக் களைத்துவிழுந்து பெருமூச்செறிந்து கிடந்தன. அத்தருணத்திற் குள்ளநரி ஒன்று தற்செயலாய் அவ்விடம் சேர்ந்து, மிருகேந்திரனும் காடியும் செயலற்றுக் குறைப்பிராணிகளாய்ப் படுத்திருக்கக் கண்டு, அது நற்சமயமென்று அச்சமின்றிக் கிட்டப்போய் மான்குட்டியைக் கௌவிக் கடுகென இழுத்துக்கொண்டு தப்பிவிட்டது.

அதைத் தடுக்க வசமற்றுப் பலம் குன்றியிருந்த எதிரிகள் இரண்டும் பரிதபித்து, 'ஆ! நம்மைப்போல மதிகெட்டு மானமிழந்தவர்கள் எங்கும் இல்லை. நாம் பிணங்கி ஒருவரை ஒருவர் வருத்திச் செயலழிந்துபோக, அந்தக் கர்மசண்டாளன் ஏனென்று கேட்பார் எவருமின்றி இஷ்டப்படி மான் குட்டியின் மாமிசத்தைத் தின்று கொழுத்துச் சுகித்திருக்கும்படி நேர்ந்ததே. இது கால இயற்கை' எனச் சொல்லித் துக்கித்தன.

நியாயசபை ஏறி வழக்கிடலாகாது. சில சமயங்களில் உபயகட்சியாரும் ஒருவர்மீதொருவர் உக்கிரங்கொண்டு மெய்ம்மறந்து, தம்முயிரைத் திரும்பெனவும் பொருள்செய்யாமல் எதிரியை வாட்டி வருத்திக் குடிகெடுப்பதே கருமமென்று ஆக்கிரமிப்பார்கள். வழக்கு நடந்தேற நடந்தேற நியாயவாதிகளுக்கு நாளொருவண்ணம் செல்வம் பெருகும். இருவருக்கு விவாதம் உண்டாகும்பொழுது அவர்கள் நியாயாதிபதி முன்னிலையிற் போய் வியாச்சியஞ்செய்து கைப்பொருள் இழந்து, காலத்தை வீணிற் கழித்துத் தீராத

தொல்லைக்கு ஆளாவதிலும் நல்லவர்களென்று நால்வரும் நன்குமதிக்கும் உத்தம புருஷர் இரண்டு மூன்று பெயருக்குத் தமது வழக்கைச் சொல்லித் தீர்த்துக்கொள்வது உசிதம். வழக்குத் தீர்ப்பதைக்குறித்துச் சந்தேகம் பிறந்தால், வாதியும் பிரதிவாதியும் நியாயசபை ஏறி வியாச்சியச் சொத்து முழுவதையும் இழந்துபோவதுமன்றி, செலவும் இறுக்காதபடி வியாச்சியச் சொத்தை மனம் பொருந்திப் பாகித்துக்கொள்வது உத்தமம்.

பேதைகள் நியாயவாதிகளைப் பெருஞ்செல்வ ராக்குவார்கள்.

## 16. அறிவின் அருமை பெருமை

கிழக்குத் தேசத்துத் தேசாதிபதி ஒருவனுடைய மகா மந்திரி ஏதோ பாரதூரமான குற்றத்திற்காக ஜீவனுள்ளளவும் சிறையிருக்கத் தீர்ப்புப்பெற்று, ஓர் உன்னத கோபுரத்தின் உயர்ந்த மேன்மாடத்திற் கைதியாயிருந்தான். அப்பொழுது ஒருநாளிராத்திரி அவன் பத்தினி அம்மாடத்தின் பலகணிப்புறத்தில் கீழ்ப்போய் நின்று தனது அவகதியை நினைந்து, தேம்பித் தேம்பி அழுதாள். அழுகுரற் கேட்டு, அமைச்சன் 'பெண்ணே, நீ இப்படிப் பிரதிதினமும் உள்ளங் கரைந்து புலம்புவதனாற் பயன் ஒன்றுமில்லை. ஒரு யுத்தி சொல்லக்கேள்: வியர்த்தமாய் இங்கு நிற்காமல் நேரே வீட்டுக்குப் போய், உயிரோடே கருவண்டு ஒன்று, நெய் ஒரு பலம், மெல்லிய பட்டுநூற் பந்து ஒன்று, முறுக்குநூற் கழி ஒன்று, கயிற்றுப் பந்து ஒன்று, வடச்சுருள் ஒன்று, தவறுமல் இத்தனையும் சேகரித்துக் கொண்டுவா' என்று சொல்லி அனுப்பினான். மந்திரி மனைவியாகிய அம்மங்கை அந்த நிமிஷமே விரைந்து, வீட்டுக்குத் திரும்பிப்போய்,

மேற்குறித்த வஸ்துக்களைச் சேகரித்துக் கணவன் சொற்படி மறுதினம் இராத்திரி, கோபுர மாடத்தின் புறத்திற் கொண்டு போய் வைத்திருந்தாள்.

அதுகண்டு, சிறையிருந்த அமைச்சன் 'எனது பிராண நாயகி! நீ கொண்டுவந்திருக்கின்ற வண்டின் சிரசில் ஒரு துளி நெய் தடவி, பட்டு நூலின் ஒரு முனையை அதன் இடுப்பிற் கட்டி, வண்டைக் கோபுரமதிலில் தலைநிமிர்ந்திருக்க வைத்துவிடு' என்று திட்டம் சொல்ல, அவள் அதேபிரகாரம் செய்தாள். வைத்தவுடன் அவ்வண்டு தலையிற் பூசிய நெய் மணம் பிடித்துக் கோபுரம் ஏறி, மந்திரி சிறையிருந்த காவற்கூடத்தின் பலகணியிற் சேர்ந்தது. சேரவே, வண்டின் இடையிற் கட்டிய பட்டுநூற் பந்தின் ஒரு முனையை மந்திரி கைக்கொண்டு, அதன் மறுமுனையில் முறுக்குநூலின் ஒரு முனையையும், இதன் மறுமுனையில் கயிற்றின் ஒரு தலைப்பையும், அந்தக் கயிற்றின் எதிர்முனையில் பெருவடச்சுருளின் ஒரு முனையையும் கெட்டியாய் முடிந்துவிடக் கற்பித்தான். அவள் அவ்வாறே செய்தாள். அதன்பின் மந்திரி அவைகளை ஒவ்வொன்றாய் இழுத்து, பலமான வடத்தைப் பிடித்து, பலகணிக்கு இட்டிருந்த இருப்புக்கிராதிக் கம்பியில் இறுகக்கட்டி, அதன் உதவியாற் பலகணியினின்றும் பதைப்பற்று இறங்கி அடித்தரை சேர்ந்து ஓடித் தப்பினான்.

இது கற்பிதகதையாயிருந்தாலும் இருக்கும். ஆனால், 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம்' என்பதுபோல, புத்தி சக்தி உள்ளவன் தன் விவேக நுணுக்கத்தால் சமயத்தில் எந்தக் கருமத்தையும் ஏற்கும் உபாயம் சூழ்ந்து நினைந்தபடி அணுவுந் தவறாமற் சாதிக்கமாட்டுவானென்று இதனால் துலாம்பரமாய்த் தெரிகின்றது. யாதாயினும் ஒரு கருமம் செய்யும்பொழுது பிரதிபந்தம் உண்டானால் நிர்மூடன் அதை விலக்கி, எண்ணிய கருமத்தை முடிக்கத் தன் பலம் போதா

தென்று மனம் குன்றி விட்டுவிடுவான். விவேகியோ, அப்படி அல்ல; நேர்ந்த தடையைத் தவிர்க்கும் உபாயம் இன்னதென்று பதைப்பறக் கண்டறிந்து செய்து, மனோற்சாகத்துடன் நினைத்த கருமம் முடிப்பான்.



## 17. ஆமை

குறுகி அண்டவடிவாயிருக்கும் ஆமையின் உடலுக்கு மேலும் கீழும் அமைந்திருக்கின்ற ஓடு இரண்டும் அரணாயிருக்கின்றன. அவ்வோடுகள் பொருந்தும் சந்தில் ஆமை தன் தலை, கால், வால் முதலிய உறுப்புகளைக் கஷ்டமின்றி எளிதாக நீட்டவும் அடக்கிக்கொள்ளவும் தக்கதாக அளவான துவாரங்கள் உண்டு. இந்த இயற்கையால் கூர்மத்துக்கு ஐந்துறுப்படக்கி எனப் பெயர் வழங்கும். ஆமையெல்

லாம் ஓரினமல்ல. அவற்றுட் பல இனமுண்டு. பிரதான மானவை நிலஆமை, நீர்ஆமை, கடல்ஆமை என்பவைகளே. நிலஆமைக்கு ஆகாரம் புல் பூண்டு கீரைகளும் பூச்சி புழுக் களுமாம். கிழங்கையும் வேரையும் தோண்டத்தக்க பல மான கூர் நகங்கள் அதன் குறுங்காலில் அமைந்திருக்கின் றன. யாதாயினும் ஒரு மிருகம் எதிர்த்து நெருங்கிவரும் பொழுது ஆமை தன் உறுப்புகளை அடக்கிக்கொண்டு அச்ச மின்றிக் கற்போலக் கிடக்கும்.

சேற்றிற் கால் புதையாமல் தண்ணீரில் எளிதாக நீந்த உதவும்படி நீராமைக்குக் கால்விரல்களினிடையில் தோற் சவ்வு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு இரை விசேஷமாய்ச் சிறு மச்சமும் பூச்சி புழுக்களுமே. பெரு மச்சங்கள் ஆமை யைக் கண்டுபிடிக்கத் தொடரும்போது அது சேற்றுக் குள்ளே புதைந்திருந்து தண்ணீரைக் கலக்கிவிட, அதற்கு விரோதியாகத் தொடர்ந்துபோன மச்சம் வழிதிசை தெரி யாமல் திரும்பிப் போய்விடும்.

ஆமைகளிற் பெரிது கடல்ஆமை. கடல் ஆமையின் காலில் விரல் இல்லை. அக்கால் மீன் சிறகை ஒத்திருக்கும். ஒரு ஜாதிக் கடலாமையின் ஓடு மிகவும் சிறந்திருக்கின்ற தனால் அதினாற் சீப்பு முதலிய உபயோகமான கருவிகள் செய்து விற்பார்கள். அவ்வோட்டினால் தென்னிலங்கையில் விசித்திரமான நகைப்பெட்டி முதலிய அணிகலச் செப்புகள் விஸ்தாரமாய்ச் செய்து விற்பதுண்டு. பசிய நிறமுள்ள மற்றொரு ஜாதிக் கடலாமையின் மாமிசம் நாவிற்கு மதுர மென்று பாராட்டுவார்கள். கடல்ஆமை மணலில் முட்டை யிடக் கரையேறும்பொழுது செம்படவர் அதை மல்லாக்கப் புரட்டிவிட்டுப் பிடித்துக்கொண்டு போவார்கள். மணலி லிடும் முட்டையில் ஆதித்த கிரணத்தின் உஷ்ணம் ஏறிக் குஞ்சு பொரிக்கும்.

ஆமைஜாதி அனைத்தும் முட்டையிலிருந்து பிறப்பதனால் அவை அண்டஜம் எனும் வகுப்பைச் சேர்ந்திருக்கின்றன. சில ஆமைகள் இருநூறு வயசுக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

வெகுகாலத்திற்குமுன் அபூர்வ பரிமாணமுள்ள ஆமைகள் இந்தியாவில் விர்த்தியாயின. இமயமலை அடிவாரத்தில் அப்போதப்போது கண்டெடுக்கும் சில ஆமை ஓடுகளின் நீளம் பன்னிரண்டு அடி.

## 18. சக்கரவர்த்தியும் சிறுவனும்

ஆஸ்திரியா தேசத்து இரண்டாம் சக்கரவர்த்தியாகிய 'யோஸேவ்' என்பவர் தமது இராச்சியத்தை யடுத்த விஷயங்களையும், பிரஜைகளின் நிலையையும் உள்ளவாறு நிதானித்தறியும்பொருட்டு அடிக்கடி மாறுவேடம்பூண்டு நகர் வலஞ்செய்வது வழக்கம். ஒருமுறை அவ்வரசர் சாதாரண வுடை தரித்தவராய் நகரசோதனை செய்துகொண்டு இராச வீதியில் வரும்போது அழுக்குடை தரித்த பன்னிரண்டு பிராயமுள்ள வோர் சிறுவன் தம்மை விடாது நெடுந்தூரந் தொடர்ந்துவருவதைக் கண்ணுற்று, 'என் சிறிய நண்பனே! உனக்கு வேண்டுவதியாது' என வினவினர். சக்கரவர்த்தியின் கண்களும் முகமும் அன்புமயமாய் விளங்கக்கண்ட அவ்விளைஞன், அவர் சக்கரவர்த்தியென் றுணராது, 'ஐயா! தாங்கள் என்னிடத்தில் மிகவும் அன்பாய்ப் பேசினதற்காக மிகவும் சந்தோஷிக்கின்றேன். எனக்குச் சிறிது உதவிபுரியத் தாங்கள் மறுக்கமாட்டீர்களென்று நம்புகின்றேன்' என்றனன். 'நீ கேட்டவாறு உதவிபுரிவது எனக்குச் சந்தோஷமே; ஆயினும் இவ்வீதியினின்று நீ யாசிப்பதற்குக் காரண

மென்ன? உன்னைப் பார்த்தால் யாசகன்போற் காணப்படவில்லையே' என்று மன்னர் மாறுத்தரம் புரிந்தனர்.

உடனே சிறுவன் தன் கண்களில் நீர் ததும்ப, 'ஐயனே, யான் ஒருபோதும் யாசித்ததில்லை; என் தந்தை எம்மையாளும் சக்கரவர்த்தியின் பட்டாளத்தைச்சேர்ந்தவர்; அவர் சிறிது காலத்துக்கு முன்னர் நோய்வாய்ப்பட் டிறக்கவே நானும், என் தாயாரும், இரு சகோதரரும் இக்கதியடைந்தோம். இப்பொழுதும் என் தாயார் நோயாளியாய்ப் படுக்கையே தஞ்சமென் றிருக்கின்றாள். மருந்துக்காவது புசிப்பதற்காவது ஒன்றுமில்லை. என்னிரு சகோதரரையும் அவளுக்குத் துணையாக வீட்டில் விடுத்து யான் யாசித்தேனும் ஆகாரம் சம்பாதிக்கக் கருதி இவ்விடம் வந்தேன். தங்களுக்குச் சித்தமிருந்தால் எனக்கு உதவிபுரியலாம்' என்றனன். இவையனைத்துங் கூறவே சிறுவன் கண்களினின்றுங் கண்ணீர் முத்துப்போற் சொரிந்தது.

'நல்லது, நீ விசனப்படவேண்டாம். உனக்கு யான் சிறிது உதவிபுரிகின்றேன். முதலாவது உன் தாயாரைச் சொஸ்தப்படுத்தப் பார்' என்று சொல்லி அவன் கையில் ஒரு பவுண் கொடுத்து, 'நீ விரைவாய்ச் சென்று ஒரு வைத்தியனை அழைத்துக்கொண்டுபோய் உன் தாய்க்கு வேண்டியவற்றைச் செய்' என்று சக்கரவர்த்தி சொல்லியனுப்பிவிட்டார். பணத்தைப்பெற்ற அச்சிறுவன்சக்கரவர்த்திக்கு அநேக வந்தனங்கூறி, வைத்தியரை அழைக்கச் சென்றனன்.

பையனுடைய இருப்பிடத்தை முன்னரே அவனிடத்தில் விசாரித்தறிந்த சக்கரவர்த்தி நேரே சிறுவன் வீட்டிற்குச் சென்றனர்.

சிறுவனுடைய தாய் படுத்திருந்த அறை மிகவும் சுத்தமாயும் ஒழுங்காயுமிருந்தது. அவள் ஒரு பழைய கட்டிலின் மேற் பரப்பியிருந்த வைக்கோற் படுக்கையின்மீது சயனித்

திருந்தனள். பார்வைக்குச் சற்று இளமைப்பருவமுள்ளவளாய்க் காணப்பட்டாலும், அவள் முகம் நோயால் வாடியிருந்தது. வீட்டுச்சாமான்களனைத்தையும் சாப்பாட்டுக்காக விற்றுவிட்டமையால் அங்கு ஒன்றுங் காணப்படவில்லை. சக்கரவர்த்தியைக் கண்டவுடன் அவ்விதவையும் பிள்ளைகளும் ஆச்சரியப்பட்டனர். அவர் யாரென்று அவர்கள் அறிந்துகொள்ளவில்லையாயினும், அவருடைய உடுப்பிலிருந்து அவர் யாரோ பெரிய பிரபுவென்று நிதானித்துக்கொண்டனர்.

சக்கரவர்த்தி, அவ்விதவை படுத்திருக்கும் படுக்கையண்டை போய், 'அம்மா! யான் ஓர் வைத்தியன்; நீங்கள் நோயுற்றிருப்பதைக் கேள்வியுற்று என்னாலியன்ற உதவிபுரிய இவ்விடம் வந்தேன்' என்றார்.

'ஐயா! தாங்கள் செய்யப்போகும் வைத்தியத்திற்காகக் கொடுப்பதற்கு என்னிடத்திற் பணமில்லையே; நான் மிகவும் ஏழையாயிற்றே' என்றனள் விதவை.

'நீங்கள் அதைக்குறித்துச் சற்றுங் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களுக்குச் சுகமும் பலமும் வரச் செய்வேனாயின் அதனாலுண்டாகும் சந்தோஷமே எனக்குப் போதியது' என்று கூறி, அவளுடைய நோயைக்குறித்தும், புருஷனுடைய மரணத்தைக்குறித்தும், அதனாலுண்டான வறுமையைக்குறித்தும் முற்ற விசாரித்தபின்னர், ஒரு காயிதத்துண்டில் சில வசனங்களை யெழுதி அவள் பக்கத்தில் வைத்துவிட்டு, 'இதோ! உங்களுக்கு வேண்டிய மருந்தை இக்காயிதத்தில் எழுதியிருக்கின்றேன்; உங்கள் குமாரன் வந்தவுடன் இதைக் காண்பியுங்கள்; நான் மறுமுறை இவ்விடம் வரும்போது உங்களைச் சுகத்தோடு காண்பேனென்றெதிர்பார்க்கின்றேன்' என மொழிந்து தமது அரமனைக்குச் சென்றனர்.

சிறிது நேரத்துக்குள் அவ்விதவையின் மூத்தகுமாரனு கிய மேற்கூறிய சிறுவன் ஒரு வைத்தியரையு மழைத்துக் கொண்டுவந்து, 'அம்மா! ஒரு அன்புள்ள பிரபு என் கையில் ஒரு பவுண் கொடுத்து உனக்காக ஒரு வைத்தியரை அழைத்துத் தக்கவாறு வைத்தியம் செய்விக்கச் சொன்னார். இதோ வைத்தியரை அழைத்து வந்திருக்கின்றேன். ஆகா ரத்துக்கு வேண்டியவற்றையும் சித்தமாய் வாங்கி வந்திருக் கின்றேன்' என்றான்.

'இப்பொழுதுதான் ஒரு வைத்தியர் இவ்விடம் வந்து என்னைப் பார்வையிட்டதன்பின் மருந்தும் எழுதிக்கொ டுத்துவிட்டுச் சென்றனர். இதோ இருக்கிறது அக் காயி தம்' என்று சொல்லிக் காயிதத்தை மகனிடத்திற் கொடுத் தனள் அவ்விதவை.

சிறுவன் காயிதத்தைப் படித்துப் பார்த்து ஆனந்த சாக ரத்தில் மூழ்கினவனாய், 'அம்மா! இதுபோன்ற மருந்து வேறொரு வைத்தியரு மெழுதமாட்டார். இதில் நமக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கும்படி எழுதி எம்மன்னரே கையெழுத்து வைத்திருக்கின்றனர். இங்கு வந்தவர் நமது சக்கரவர்த்தியே' என்றான். 'மகனே! உன்னை வீதியிற் சந் தித்து ஒரு பவுண் கொடுத்தவரும் அவராய்த்தான் இருக்க வேண்டும்' என்று அவ்விதவை கூறினள்.

மன்னவனளித்த பவுணைக்கொண்டு வைத்தியஞ் செய் வித்தமையால், அவ்விதவையும் சீக்கிரம் தேறி சுகமும் பலமு மடைந்தனள். அப்பணமும் செலவாக உபகாரச்சம்பளமும் கிடைத்தமையால் அவர்கள் இடுக்கணொழிந்து இன்புற்றிருந் தனர். வறுமையினால் உடுக்கத் துணியும் உண்ண உணவு மற்றிருந்த அக்குடும்பத்துக்கு அரசன் அளித்த உபகாரச் சம்பளம் மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது.

## 19. ஜுரம்

இத்தேசத்தில் இறப்பவர்களில் மூன்பின் பாதிப்பெயர் இறப்பது ஜுரத்தினாலேயே. பெரும்பாலும் மனுஷர் தங்கள் சௌக்கியத்தைக்குறித்து அஜாக்கிரதையா யிருப்பதனால் இந்த ரோகம் உண்டாகின்றது.

காயத்திற் கிளம்பும் ஒரு வகை விஷத்தால் ஜுரம் உற்பத்தியாகின்றதென்பது மருத்துவநூலோர் உத்தேசம். நிலம் குளிர மழை வருஷித்து வெயிலில் ஈரம் உலரும்பொழுது இந்த விஷம் மிகு திரளாய் உண்டாகின்றது. இவ்வாறு உற்பத்தியாகும் நஞ்சு ஊறிப் பழுதுறும் தண்ணீரை மனுஷர் பருகுவதனால் அடிக்கடி ஜுரம் காண்கிறது. சுத்த தண்ணீர் அகப்படுவது கஷ்டமாயிருக்கும்பொழுது தாகத்திற்கு வெந்நீர் வைத்துச் சாப்பிடவேண்டும்.

ஜுரத்தைத் தோற்றுவிக்கும் விஷம் தேகபலம் குன்றியிருக்கும் இராத்திரிகாலத்தில் மிகவும் கடுவிஷமாயிருக்கின்றது. இரவிற் பனியிலும் காற்றிலும் வெளிப்படல் ஆகாது. இராக்காலத்தில்தேகத்திலே குளிர்வருமல் சூடு பிறக்கும்படி செய்யவேண்டும். ஜுரத்தை ஜனிப்பிக்கும் விஷம் தரைக்குச் சமீபத்தில் கிளம்புவதாகத் தெரிகின்றதனால் பொருளுடையவர்கள் மேன்மாடத்திலும், இல்லாதவர்கள் கட்டிலிலும் நித்திரை செய்யவேண்டும். ஜுரரோகம் தலைப்படும்பொழுது விருட்சத்தின்கீழ்ப் படுத்து நித்திரைசெய்தால் விக்கினம் உண்டாகும்.

ஈரவஸ்திரம் தரித்துக்கொண்டு துயில்வதும், அளவிற்கு அதிக வெப்பம் அல்லது குளிர்ச்சி தேகத்திற்படுவதும், தேகம் இளைத்து ஆயாசம் அதிகம் உண்டாவதும்

ஜுரம் காண்பதற்குரிய காரணங்களே. ஊரில் ஜுரம் மிகுந்து உண்டாயிருக்கும்பொழுது காலையில் ஒன்றும் புசிக்காமல் வெறு வயிற்றோடு வெளிப்படல் ஆகாது. பசி அடங்கத் தேகத்திற்குத் தீங்கு செய்யாத நல்லுண்டி உட் கொள்ளவேண்டும். சாதாரணமாய் உடுக்கும் ஆடையி லும் தேகத்திற்குச் சற்று அதிக அனலான ஆடை உடுக்க வேண்டும்.

ஒருவனுக்கு ஜுரம் கண்டிருக்கும்பொழுது அவன் வெளி யில் திரியலாகாது. இராத்திரிகாலத்தில் வீட்டுக்குள் பள்ளி கொள்வதன்றி, தெருத்திண்ணையிற் படுத்து நித்திரை செய் வது தகாது. விரேசனத்திற்குச் சிற்றாமணக்கெண்ணெய் ஒருமுறை உட்கொண்டபின், குயினீன் என்னும் மருந்து சாப் பிடவேண்டும். அது ஜுரத்திற்குப் பரமௌஷதம். ஜுரங் கண்டு வருந்தும்பொழுது வெகு ஜனங்கள் ‘இலங்கனம் பரமௌஷதம்’ என வழங்கும் பழமொழியைப் பாராட்டிப் பட்டினியிருப்பார்கள். இவ்வழக்கம் தகாது. இதனால் ரோகம் உக்கிரங்கொண்டு பலப்படுவதன்றிச் சற்றும் தணி யாது. ஜுரங்கண்டு வருந்துமவர்கள் கஞ்சியாவது பாலா வது மாமிச ரசமாவது சாப்பிட்டு, வியாதி சற்று லகுவாகும் பொழுது சாதாரணமாய் உண்ணும் உணவை உட்கொள்ள வேண்டும்.

ஜுரம் அடித்து வருந்திச் சொஸ்தமடையும்பொழுது அநேகம் பெயர் மிதமிஞ்சி ஸ்நானம் செய்வதனால் ரோகம் திரும்புகின்றது. இப்படி ஒருபொழுதும் செய்யக்கூடாது. குளிர் ஏறுமல் தேகம் அனலாயிருக்கவேண்டும்.



## 20. சிங்கம்

சிங்கம் மிருகங்கள் யாவற்றுள்ளும் மிக்க பலமும் தைரியமும் முயற்சியுமுடையதாயிருப்பதால் அதற்கு மிருகேந்திரன் அல்லது மிருகங்களுக்கு அரசன் என்னும் நாமம் வழங்கிவருகின்றது. அதன் தலை பெரிதாயும், கண்கள் பகற்காலத்தில் ஒடுங்கி ஒரு பிளவுபோலவும் இராக்காலத்தில் நெருப்புப் பொறிபோற் பளபளப்பாயும் காணப்படும். அதன் காதுகள் வட்டமானவை; வாயோ மிகவும் அகன்றதாயும், உதடுகள் நீண்ட மீசையுடையனவாயு மிருக்கும். அதன் நா அரம்போல் அமைக்கப்பட்டிருப்பதால் எலும்பிலிருந்து மாமிசத்தைப் பிரித்துச் சாப்பிடுகிறதற்கு அனுகூலப்படுகிறது. சிங்கத்தின் பற்கள் நீண்டவையும் கூர்மை பொருந்தியவையுமா யிருப்பதால் எவ்வித மாமிசத்தையும் இலேசாய்க் கிழிக்க உதவுகின்றன. அது, தலைமுதல் வால் மூலம்வரையில் சற்றேறக்குறைய எட்டடி நீளமுடையது. ஆண்சிங்கத்தினது தலையின் மேற்புறத்திலும் தாடையிலும் கழுத்திலும் நீண்டு சடைத்த மயிர் வளர்ந்திருக்கும். அது குதிரையின் பிடர் மயிர்போற் றோன்றும். பெண் சிங்கத்துக்கோ அப்படி மயிர் வளர்ந்திருக்கிறதில்லை. சிங்கத்தின் பிடர் மயிரோ அதன் கம்பீரமான தோற்றத்திற்கும் பயங்கர

மான உருவத்திற்கும் காரணம். அது மகா பலமுள்ளதாகையால் ஒரு பெரிய எருதைத்தானும் தன்னுடைய பலத்த முன்காலால் ஒரே அறையா யறைந்து கொன்று பின்னர் தன் ஆகாரத்துக்காகத் தான் வசிக்குங் குகைக்கு இழுத்துக் கொண்டுபோகும் சக்தியுடையது. அது தன் வாலை அசைப்பதனால் மிக்க பலசாலியான ஒரு மனுஷனையும் தரையிற் றள்ளக்கூடும்.

சிங்கத்தின் கர்ச்சனை மிகவும் உரத்ததும் பயங்கரமுள்ளதுமா யிருக்கும். அது உக்கிரமடைந்திருக்கும்போது இடைவிடாது கர்ச்சித்து, பூமியைத் தன் கால்களால் மோதி, வாலால் இருபக்கத்தையும் புடைத்து, பிடர் மயிரைச் சிலுப்பி நெருப்புப்போன்ற தன் கண்களை உருட்டி விழித்துப் பற்களைக் காட்டி உறுமி, பார்ப்பவர்கள் திகிலடையுமாறு செய்யும். சிங்கத்தின் கர்ச்சனை இடிமுழக்கத்தை யொக்கும் என்று சிலர் கூறுவார்கள். சிங்கம் ஆபிரிக்காவிலும் இந்தியா, பாரசீகம் முதலிய ஆசியாவின் சில உஷ்ண பாகங்களிலும் சஞ்சரிக்கின்றது. சில யூவ்றெற்றிஸ் நதி தீரங்களிலுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. அது பசியாயிருக்கும்போது தனக்கு முன்வரும் எந்த மிருகத்தின்மேலும் விழுந்தடிக்க முயலும். இதன்பொருட்டு அது சாதாரணமாய் நதிமருங்கிலும் நீர்நிலைகட்கணித்தாயும் பதுங்கி நிற்கும். தான் பாய்ந்து பிடிக்கஎத்தனித்த மிருகம் அதனின்றும் தப்பிவிட்டால், இரண்டாம்முறை அம்மிருகத்தின்மீது பாய்வது அதன் வழக்கமன்று. இது சிங்கத்தின்கண்ணுள்ள ஓர் விசேஷித்த குணமேயாம். சிங்கம் எவ்வளவு மேன்மையுள்ள மிருகமென்பது இதனால் விளங்குகின்றது.

சிங்கம் மாமிச பட்சணி. அதாவது இதர மிருகங்களே அதன் ஆகாரம். பெண்சிங்கமானது ஆண்சிங்கத்தைவிட

4

சற்றுச் சிறியதும் மிருதுத்தன்மையும் சாந்தகுணமும் பொருந்தியது. அது தன் குட்டிகளிடத்தில் மிக்க பிரீதியுடையது. ஆயின் அதன் சாந்தகுணம் குட்டிபோடும் வரையிலுந்தான் இருக்கும். அதன்பின் பெண்சிங்கம் மிக்க உக்கிரமடைகிறது. அது தன் குட்டிகளைத் தன் பக்கத்தில் விளையாடும்படி விட்டுவிட்டு அவைகளைத் தன் நாவினால் நக்கிச் சுத்தப்படுத்தி அன்புகாட்டும். அச்சமயத்தில் யாராவது கிட்ட அணுகினால் உடனே அது துண்டுதுண்டாகக் கிழித்துவிடு மியல்பினையுடையது. சிங்கம் குதிரையைச் சருவுவதில் மிக்க பிரீதியுடையது. இதன்பொருட்டு அது குதிரையைக் கண்டால் அதை அடித்துக்கொல்லும் நோக்கத்துடன் வெகுதூரம் தொடர்ந்து செல்லும். தக்கசமயம் நேர்ந்தவுடன் அதன்மேற் பாய்ந்து ஒரு நொடிப்பொழுதில் அதைக் கீழே தள்ளிச் சின்னாபின்னமாகக் கிழித்துத் தனக்கு இரையாக்கிக் கொள்ளும்.

சிங்கம் துஷ்டமிருகமாதலின், பிரபுக்கள் துரைமக்கள் இராசாதிகாரிகளாதியோர் அதை வேட்டையாடி வருகிறார்கள். ஆனால் சிங்கவேட்டை மிகவும் கஷ்டமானது. வேட்டைக்காரர்களையும் நாய்களையும் காணும்போது அதன் உக்கிரம் முன்னிலும் பன்மடங் கதிகமாகிறது. தான் மடியும் போதும் ஒருவனைக் கொன்றபின்தான் தன்னுயிரை விடும். சிங்கவேட்டை எவ்வளவு மோசகரமானதென்பது பின்வருங் கதையினால் தெளிவாகும்.

ஒருமுறை ஒரு துரை ஆயுததாரியாய், துப்பாக்கி கையிலேந்தி, சில வேட்டைக்காரரோடும் பல வேட்டைநாய்களோடும் சிங்கவேட்டைக்குச் சென்றார். சென்ற அத்துரை காட்டினுள் நுழைந்து சிங்கம் வசிக்கும் குகைகளை அச்சமின்றி ஆராய்வாராயினர். அச்சமயத்தில் முற்ற வளர்ந்து பார்ப்பவரைத் திகிலுறச்செய்யும் ஓர் கேசரி தன் குகையி

னின்றும் சடுதியாய்ப் புறப்பட்டுத் துரை முன்னர் எதிர்ப் பட்டது. கண்களிற் றீப்பொறி சிந்த உக்கிராவேசத்தோடு சிங்கம் எதிர்ப்படவே, துரை தமது துப்பாக்கியைச் சித்தப் படுத்தும் வண்ணம் சற்றுப் பின்வாங்கினர். துரை பின் னடையவே வேட்டைக்காரர் திகிலடைந்து துரையிடத்துக்கு ஓடிவரத் தலைப்பட்டனர். சிங்கமோ இமைப்பொழுதில் அவர் கள்மீது பாய்ந்து ஒருவனைக் கீழே தள்ளியது. அப்பொழுது நடந்த காட்சி மிக்க பயங்கரமானது. சிங்கம் கீழே விழுந்த வன்மீது தன் காலை யூன்றிக்கொண்டு நெருப்புப் பொறி போன்ற கண்களை யுருட்டி அண்டமெல்லாஞ் செவிடுபடுமாறு கர்ச்சிக்க, எஞ்சிய வேட்டைக்காரர் பயந்து துரையிடத்துக்கு ஓடிவர, துரை வேட்டைக்காரர் சிங்கத்துக்கும் தமக்கும் மத் தியில் வந்துகொண்டிருப்பதால் சரியாய்க் குறிபார்த்து அதை யடிக்கச் சக்தியற்றவராய்ச் சும்மா இருந்துவிட்டனர்.

சிறிது நேரத்தின்பின்பு சிங்கம் உக்கிரந்தணிந்து ஒரு வருக்கும் யாதொரு தீங்கும் புரியாது புதருட் சென்றது. அச்சமயத்தில் துரை சரியாய்க் குறிபார்த்துச் சுடவே சிங் கம் அலறிக்கொண்டு பூமிமீது வீழ்ந்திறந்தது.

சிங்கம் ஈற்றிற் கொல்லப்பட்டிறந்தாலும் துரையும் வேட் டைக்காரரும் சிறிதுநேரம் எவ்வளவு அபாயகரமான நிலையி லிருந்தார்கள் பாருங்கள். எல்லாம் வல்ல கடவுள் அவர்கள் பங்கிலிருந்து மீட்டு இரக்ஷித்தார். இல்லாவிடில் அவர்கள் கதி அதோகதியாய்த்தான் முடியும்.

பரிசுத்த வேதாகமத்தில் சிங்கம் பலவிடங்களில் உதா ரணமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. சிங்கம் மிருகங்களெனைத் திலும் மிக்க வலுவுள்ளதென்று சாலொமோன் ஞானி கூறு கின்றார்.



## 21. உதாரமதியுள்ள சேவகன்

சில வருடங்களுக்கு முன் ருஷியாதேசத்துக் குலசிரேஷ்டர் ஒருவர் தம் பத்தினியோடும் ஏக புத்திரனோடும் நாலு குதிரை பூட்டிய இரதத்திற் சற்றுத்தூரம் பிரயாணம் போனார். உயிருக் குயிராக அவரில் அன்பு பூண்டொழுகிய பரிசாரகன் ஒருவன் அந்த இரதத்தின் பின்பக்கத்தில் ஏறிப் போனான்.

பொழுதுபட்டு இருளவும் அண்டை அயலிற் கோநாய்கள் திரளாய்க் கூடி ஊளையிட்ட சத்தம் கேட்டது. ஆனது பற்றி, அம்மகாப்பிரபு இரதத்தைத் தாமசமின்றி விரைந்து செலுத்திக்கொண்டுபோகச் சாரதிக்குக் கற்பித்தார். இரதம் வாயுவேகமாய்ப் பறந்தும் கோநாய்கள் விரைந்து ஓடி இரதத்திற்கு நெருங்கிவந்தது கண்டு, குண்டு மருந்து தாணி

த்து வைத்திருந்த துப்பாக்கிகளால் குலமகனும் பரிசாரகனும் தலைக்கு ஒரு வெடி சுட, குண்டுபட்டுக் கோநாய்கள் இரண்டு விழுந்தன. கூடப்போன கோநாய்கள் அவைகளை அந்தக்ஷணமே ஆவலுடன் பட்சித்துக்கொண்டு நிற்க, அது சமயமென்று சாரதி குதிரைகளை விரைவாய்ச் செலுத்தினான். ஆனால், உதிரம் குடித்து ருசிகண்ட அந்தக் கோநாய்களுக்குப் பின்னும் அதிக உக்கிரம் உண்டாய்ப் பிரசண்ட வேகத்துடன் கண்ணுக்கெட்டாத்தூரத்தில் ஓடிமறைந்த இரதத்தைத் தொடர்ந்துபோய் மீளவும் கிட்டின. முன்போலப் பிரபுவும் பரிசாரகனும் துணிவுகுன்றாமற் பின்னும் ஒருமுறை இரண்டு வெடி சுட, இரண்டு கோநாய்கள் உடல் ஊறுபட்டுத் தரையிற் சரிந்தன. சரிந்த பிணத்தை மற்றக் கோநாய்கள் விரைந்து கடித்துக் கிழித்துப் பட்சித்து, பிரவாகித்த உதிரத்தை ஆவலுடன் பருகியபின், அதிதீவிரமாய்ப் பாய்ந்து பறந்து இரதத்தை வழிமறித்துக்கொண்டன. அவ்வேளையில் அந்தக் குலசிரேஷ்டருக்குச் சமயோசிதமாக அபூர்வ யுக்தி பிறந்தது, குதிரைகளிலொன்றை அவிழ்த்துவிடச் சாரதிக்குக் கட்டளையிட்டார். அவன் அவிழ்த்துவிட்டவுடன் அது மிரண்டு அடுத்த காட்டில் அதிசயகதியாய்ப் பாய்ந்து போக, கோநாய்கள் அக்குதிரையைக் கொன்று பட்சிக்கும் ஆசையால் வெகு விரைவாய்த் தொடர்ந்து பிடித்துக் கடித்துப் பீறிக் கிழித்துச் சின்னபின்னப்படுத்திப் பட்சித்துக் கொண்டு நின்றன. அவைகள் அந்தப் பாக்கில் நிற்கும் பொழுது சாரதிக்கு உற்ற சமயத்திற்குத் தக்க ஊக்கமும் வீரமும் பிறந்து பின்னும் அதிக வேகமாய் மற்றக் குதிரைகளைத் தூண்டிச் செலுத்தினான். சிறிது தூரம் செல்லுமுன் அந்தக் குரூர கர்மிகளாகிய கோநாய்கள் திரும்பி நெருங்கிச் செல்ல, வேறு ஒரு குதிரையையும் அவிழ்த்துவிட்டார்கள். அதையும் அத்துஷ்ட விலங்குகள் மறித்து வதைத்துத்தின்று

நொடிப்பொழுதில் மீண்டும் சமீபித்தது கண்டு, பரிசாரகன் எஜமானனை நோக்கி 'சுவாமீ! பால்யகாலம் தொடங்கி அடியான் தங்களுக்கு அதிவிநய பயபக்தியுடன் தொண்டுசெய்து வருகிறேன். எனக்கு என் உயிரென்றும் தங்கள் உயிரென்றும் பேதம் இல்லை. தங்களுக்கு யாதாயினும் பிராண ஆபத்து நேர்ந்தால் அது எனக்கு நேர்ந்ததென்று எண்ணித் தங்களைப் பிராணபதமாக நேசிக்கிறேன். இந்தச்சமயத்தில் தங்கள் ஜீவன் தப்பிப் பிழைக்கத் தரும் உபாயம் ஒன்றொழிய, வேறில்லை. அடியேன் எனது பிராணனை உதிர வெறியெடுத்த இந்தக் கோநாய்களுக்குத் தத்தஞ் செய்து தங்கள் ஜீவனைத் தப்புவிக்கச் சித்தம் இரங்கித் தொண்டனுக்கு இடம் தரும்படி பணிந்து பிரார்த்திக்கிறேன். எனது மனைவி மக்களை மாத்திரம் ஒருகண் பார்த்துக்கொள்வீர்களானால் இனி எனக்கு இவ்வுலகில் வேறு விசாரம் எவ்வளவும் இல்லை' என்றான்.

பக்தியும் உள்ளக்கசிவும் மிகுந்த பரிசாரகன் சமயத்திற் பரிந்து வருந்திச் செய்த விண்ணப்பத்திற்கு எஜமானால் உத்தரவுபிறந்த நிமிஷமே அவன் கோநாய்களின் மத்தியிற் பாய்ந்து விழுந்து பலியாகி, எஜமானனையும் குடும்பத்தையும் இரட்சித்தான்.

'ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் பிராணனைத் தடையின்றி விடுகிற அன்பிலும் மிக்க அன்பு எவரிடத்திலும் இல்லை. நாம் பாவிகளாயிருக்கும் சமயத்திலும் கிறிஸ்து நமக்காக மரித்ததனால் தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணுகிறார்.'

## 22. விலைமதித்தற்கரிய விசேஷ பூஷணங்கள்

விலை உயர்ந்து மிகவும் சிறந்த விதம்விதமான வஸ்திரங்களும் நவரத்தினமிழைத்த விசித்திர ஆபரணங்களும் திரளாய் உள்ள சீமாட்டி ஒருத்தி தம்மைப்போலும் பெருஞ்செல்வர் கூடும் சபையில் அனைவரும் மெச்ச மேற்படி வஸ்திராபரணாதிகளைத் தரித்துக்கொண்டு வருவது வழக்கம். அப்படிப்பட்ட சமயங்களில் பலரும் தன் விசேஷ அலங்காரத்தைக் கண்டு வியந்துகொள்வது அந்தப் பெருமாட்டிக்கு அளவிறந்த ஆனந்தமாயிருந்தது.

ஒருநாள் அந்தத் தலைவி ரோமா நகரத்தில் வசிக்கும் ஒரு பிரபுபத்தினியைக் கண்டு பேசிக் கொண்டாடப் போயிருந்த சமயத்தில் தான் பூண்டிருந்த விலையேறப்பெற்ற விசித்திரமான நகைகளை ஒவ்வொன்ருய்க் காண்பித்து, அதற்குச் சென்ற தொகை இவ்வளவென்று எடுத்துரைத்தனள். கண்ணைப் பகட்டும் அதிசய அலங்காரமுள்ள அணிகள் அனைத்தையும் பாராட்டிச் சொன்னதன்மேல், தான் நினைந்தபடி அந்த ரோமா நகரத்துப் பிரபு பத்தினி தன் ஆபரணங்களை வியந்துகொள்ளவில்லையென்று முகக்குறியால் அறிந்தனள்.

ஆனதுபற்றி, மேற்படி செல்விவசம் உள்ள நகை வகை தனது ஆபரணங்களிலும் மிகச் சிறந்தவைகளாயிருத்தல் வேண்டுமென்று அனுமானித்து, தங்களிடத்தில் உள்ள நகைகளை எனக்குக் காட்டவேண்டுமென்று கேட்டாள்.

அதற்கு அந்தப் பெருமாட்டி 'எனது நகையொன்றும் இப்பொழுது இவ்விடத்தில் இல்லை; இரண்டொரு நாழிகை சென்று அவைகள் அத்தனையும் இங்கு வந்து சேரும்; சேர்ந்தபின் உங்கள் இஷ்டப்பிரகாரம் காட்டுவேன்' என மொழிந்தனள்.

84896

அவள் சொற்படி இரண்டு நாழிகைக்குள் உருவில் மிக்க சிறுவராகிய அவள் மைந்தர் இருவர் பாடசாலையினின்று திரும்பி வீடுவந்து சேர்ந்தனர். சேர்ந்தவுடன், மாதா அவர்களை அந்தச் செல்வி முன்னிலையில் விட்டு 'இவர்கள்தான் எனது ஆபரணங்கள்' என மொழிந்தனள்.

இதை வாசிக்கும் சிறுவர் சிறுமியர் எவராயினும் தம்மையும் தமது தாயர்கள் தங்கள் பூஷணங்களென்று வியந்து கூற விரும்பினால், வீட்டில் இருக்கும்பொழுதும், பாடசாலைக்குப் போய்க் கல்வி கற்கும்பொழுதும் செய்யவேண்டியவற்றைச் செய்து, தவிர்க்கவேண்டியவற்றைத் தவிர்த்துச் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களா யிருக்கவேண்டும். இப்படி இருந்தால், அவர்கள் பிதா மாதா அவர்களை விலைமதித்தற்கரிய விசேஷ பூஷணங்களென்று மனம் மகிழ்ந்துகொண்டாடுவார்கள்.

விலையேறப்பெற்ற ஆபரணங்களிலும் விசேஷ ஆபரணமென்று தன் மக்களை வியந்துகொண்டாடிய ரோமா நகரத்துச் சீமாட்டி பெயர் கொர்நீலியா (Cornelia). புருஷாத்தினங்களாகிய அவள் மைந்தர் பெயர் கிராக்கீ (Gracchi). அவர்கள் இருவரும் வளர வளர சுகுண சுகிர்தங்களில் மேலும் மேலும் அபிவிர்த்தியடைந்து பிரபலரானார்கள்.

## 23. பெண்கள் கல்வி

உங்களை உயிருக்குயிராக நேசித்து உங்களுடன் கூடி உல்லாசமாய் விளையாட விரும்பும் சகோதரிகள் உங்களுக்குண்டா? உண்டானால் நீங்களும் அவர்களை நேசிக்கவில்லையா? அவர்களைச் சந்தோஷமாய்ச் சுகித்திருக்கும்படி செய்ய உங்களுக்கு இஷ்டமில்லையா? அப்படிச் செய்வது உங்களுக்கு இஷ்டமென்று சந்தேகமின்றி நம்புகின்றேன். ஆனது



பற்றி, உங்களைப்போல அவர்களும் சுகித்து வாழும்படி செய்யத்தகும் வழி இன்னதென்று சொல்வேன் கேளுங்கள். உங்களுடன் பிறந்த சகோதரிகள் கல்வி கற்கப் பாடசாலைக்குப் போகாதிருந்தால் உங்களால் ஆமளவிற்கு முயன்று அவர்களைப் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி செய்யுங்கள். அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பும்படி உங்கள் பிதா மாதாவைப் பரிந்துகேளுங்கள். பெண்கள், கல்வி கற்பதனால் விளையும் பயன் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியுமா? மனிதர் எவ்வித சுகங்களையும்தேடி அடைதற்குக் காரணமாயுள்ளது அறிவொன்றேயாம். அவ்வறிவு கல்வியினாற் பெறப்படுவது. அது ஆடவர் பெண்கள் என்னும் இருபாலார்க்கும் இருக்கவேண்டியது அவசியமாதலின், கல்வியை ஆண்கள் எவ்வளவாய் விரும்பக் கற்றல்வேண்டுமோ அவ்வளவாய்ப் பெண்களும் கற்றல்வேண்டும். பெண்கள் தமக்குரிய கற்பொழுக்கம் தவறாது நடப்பதற்கு இன்றியமையாதது கல்வி. தங்கள் குழந்தைகளைத் தீநெறியிற் செல்லவிடாது நல்ல பழக்கம் பழக்குவதற்கும் அவர்களுக்கு உதவியாயிருப்பது கல்வி. தமது நாயகர்க்கு மந்திரிமார்போலிருந்து அவர்களுக்கு இடர் நேர்ந்த காலத்தில் ஏற்ற உபாயம் சொல்லச்செய்வதும், அவர்கள் தீநெறிப்பட்டு ஒழுகுங்கால்

அவர்களை நன்னெறியிற் செலுத்துவதற்குத் துணையாயிருப்பதும் கல்வி. வீட்டுக்குரிய வரவு செலவுக் கணக்குகளைச் சரியாய் வைப்பதற்கும், தங்கள் கணவருடைய வரவுக்குத் தக்க செலவு செய்தற்கும், அவர்களோடு ஒற்றுமையாய் வாழ்தற்கும், துணைசெய்வது கல்வி. தூர தேசத்திலிருக்கும் தன் நாயகனுடைய க்ஷேமத்தை மனைவியானவள் கடித மூலமாகத்தானே தெரிந்துகொள்ளவேண்டும். கல்வி யறிவில்லாதவள் எவ்வாறு தெரிந்துகொள்வாள்?

இனி, சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தாய்க்குச் சமீபத்திலேயே இருக்கவேண்டியவர்கள். தந்தையிலும் பார்க்கத் தாயிடத்திலே அவர்கள் அதிக பிரீதி வைப்பது இயல்பு. அவர்கள் மனம்போனவாறு நடந்து கெட்டுப்போக விடாது சன்மார்க்க நெறியில் வளர்ப்பதும், சிறு பருவத்திற் கற்பிக்க வேண்டிய கல்வியைக் கற்பிப்பதும் தேகாரோக்கியத்திற்குத் தகுந்த உணவைக் கொடுப்பதும் தாயுடைய கடமையாகும். கல்வி யறிவில்லாத மூடஸ்திரீ என்ன செய்வாள்? ஆதலால் நீங்கள் பெண்கல்வியை விருத்திசெய்ய உங்களாலாகும் பிரயத்தனங்கள் யாவும் செய்தல்வேண்டும்.

வாசிக்கப் புத்தகம் இல்லாத ஜனங்கள் வனவிலங்குகளைப் போல வியர்த்தமாக ஊருலாவித் திரிந்து வேட்டையாடியும், காட்டிலுள்ள காய் கனி கிழங்குகளைத் தேடித்தின்றும் பிழைப்பார்கள். இந்தியாவில் புத்தகங்கள் உண்டு. ஜனங்கள் வெகு பெயர் நல்ல வீடுகளில் வாசஞ்செய்து நல்ல ஆடைகளை உடுத்து வாழ்ந்திருக்கிறார்கள். ஆனாலும், இந்துக்களைப் பார்க்கிலும் ஆங்கிலேயர் வித்தையிலும் நாகரீகத்திலும் தேறி மேன்மை யடைந்து வருகின்றார்கள். அவர்களுக்கு இத்தனை மகத்துவம் உண்டானதற்குக் காரணம் என்ன? விசேஷ காரணம் என்னவெனில், இங்கிலாந்திற் சிறுவரைப்போலச் சிறுமியரும் கல்விகற்றுத் தேறு

வதே. இளமையிற் கற்ற கல்வி பின்னுளில் அவர்களுக்குப் பலவிதங்களிற் பிரயோஜனப்படுகின்றது. இத்தேசத்துப் பெண்களிலும் இங்கிலாந்திலுள்ள ஸ்திரீகளுக்கு விவேகமும் புத்தியும் மிகவும் அதிகம். அவர்கள் தங்கள் பிள்ளைகளை நன்ருய் வளர்த்து, நற்பழக்கம் பழக்கி, நல்வழி காட்டி நடத்துவார்கள். இந்தியாவில் அந்தந்தக் குடும்பத்திலுள்ள தாய்மார்கள் திருவாய்மொழியாகிய வேதபுத்தகத்தை வாசிக்கும்படி கல்வி கற்றுத் தேறுமளவும் இந்துக்களுக்கு ஒரு பொழுதும் குடும்ப சுகம் உண்டாவதுமில்லை, அவர்கள் நற்குண நற்செய்கைகளிற் பயின்று மகத்துவம் மிக்கோராவதுமில்லை.

ஆகையால் உங்கள் சகோதரிகளைக் கல்வி கற்கும்படி பாடசாலைக்கனுப்பத் தாய் தந்தையருக்குச் சம்மதம் இல்லாவிட்டால் வீட்டிலே அவகாசம் கண்டு அவர்களுக்கு நீங்களே மறந்துவிடாமல் எப்பொழுதும் கல்வி கற்பித்துக் கொண்டு வாருங்கள். புத்தகம் வாங்கிக்கொடுத்து அவர்கள் தடையற எழுத வாசிக்கப் பழகும் வரைக்கும் தினம் ஒரு பாடம் சொல்லிக்கொடுங்கள். அவர்களால் உங்களுக்குச் சற்றுச் சிரமம் உண்டாகுமென்பது வாஸ்தவந்தான். சில வேளை அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும்பொழுது உங்கள் வயசுப் பிள்ளைகளுடன் கூடி விளையாட விரும்புவீர்கள். ஆனுல், அற்ப சந்தோஷத்தைப் பாராட்டி, அற்ப சிரமத்தைப் பெரிதாய் எண்ணுமல் மனம்பொறுத்து அவர்களுக்குப் பாடம் சொல்லி அவர்கள் கண்ணைத் திறந்துவிடுவீர்களானுல் இந்த உபகாரத்திற்குப் பின்னுல் உங்களுக்குப் பிரதியுபகாரம் மிகவுமுண்டாம்; இதற்கு ஐயம் இல்லை. உங்களுடன் பிறந்த சகோதரிகள் சுத்த சத்தியவேதபுத்தகத்தைவாசித்து அஞ்ஞான இருள் நீங்க, மெய்ஞ்ஞான ஒளிபெருகி ஆத்தும ரட்சிப்பு அடையத்தக்க பக்குவசாலிகளாவார்கள். அவர்

களைப்போல நீங்களும் இயேசுகிறிஸ்துவில் அன்புகூருவீர்களானால் இருதிறத்தாரும் மோட்சத்தில் என்றென்றும் கூடிவாழ்ந்து சுகித்திருப்பீர்கள்.

## 24. புத்திர கடன்பாடு

புத்திரனானவன் தந்தை தாயாருக்குச் செய்யவேண்டிய கடமையே புத்திர கடன்பாடு எனப்படும். நம்மைப் பத்து மாதஞ் சுமந்து ஈன்றெடுத்துக் கண்ணை இமை காப்பதே போலப் பாதுகாத்து அருமையாய் வளர்த்தெடுத்த அன்னைக்கும், நம்மிடத்தே மிக்க அன்புபாராட்டி நமக்கு வேண்டுவன யாவுமளித்து நமது சுகதுக்கமே தமது சுகதுக்கமாக மதித்து நடத்திய தந்தைக்கும் நாம் அதிக கடன்பாடுள்ளவர்களாகின்றோம். இது காரணமாகவே, சிறந்த வித்துவாமுசையும் கல்விச் செல்வியுமாகிய ஔவையும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று கூறினள். புத்திரர் தம் பெற்றோர்க்கு எவ்வளவு கடன்பாடுடையராகின்றாரோ அவ்வாறே புத்திரிகளும் கடன்பாடுடையவர்கள்தான். ஆகவே நாம் புத்திரர்க்கென்று கூறுபவை யாவும் புத்திரிகட்கு அமையும். மிகச் சிறந்த தமிழ் நூலென்று உலகெலாம் புகழ்பெற்ற திருக்குறள் நூலாசிரியராகிய திருவள்ளுவர்,

'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்'

என்று கூறுகின்றார். அதாவது பிறர், புத்திரனொருவனுடைய நற்குண நற்செய்கை அறிவு ஒழுக்கமென் றிவற்றைக் கண்ணுற்று இத்தகையவோர் புத்திரசிகாமணியைப் பெறுதற்கு இவன் தந்தை யாது மாதவம் புரிந்தனனோவென்று

அதிசயிக்குமாறு நடந்துகொள்வதே மைந்தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமை என்பதாம்.

ஆதலால் நம்முடைய தாய் தந்தையரை இவ்வுலகச் செல்வமனைத்திலும் மேலாய் மதித்தல் வேண்டும். பெற்றோர்மீது மிக்க அன்பு பாராட்டிய இரண்டு குமாரரைக் குறித்து பின்னால் வரும் சிறு சரித்திரம் நன்கு விளக்கும்.

அநேக வருடங்களுக்கு முன்னர் அக்கினிமலை யொன்று திடீரென வெடித்து அவ்வெடிப்பினின்று பருவதாக்கினிப் பிரவாகம் நான்கு பக்கமும் வழிந்து, எதிர்ப்பட்ட வீடுகள், தோட்டங்கள், மானிடர், விலங்குகள் முதலிய யாவற்றையும் ஒருங்கே அழிக்கத் தலைப்பட்டது. அச்சமயத்தில் அக் குன்றினடிவாரத்தேயுள்ள நகரத்திற் குடியிருந்த ஜனங்கள் தத்தம் பொருட்களில் விலையேறப்பெற்றவைகளை மாத்திரமெடுத்துக்கொண்டு உயிர் பிழைக்குமாறு விரைந்தோடினர். சிலர் தம் ஆபரணப்பெட்டிகளையும், சிலர் தம் பணப்பெட்டிகளையும், சிலர் மதித்தற்கரிய தம் பட்டாடைகளையும் எடுத்துக்கொண்டு அதிதீவிரமாய்ச் சென்றார். சிலர் யாதொன்றையு மெடுக்கக் கருதாது தம் மின்னுயிர்மாத்திரம் பிழைத்தாற் போதுமென்று கருதி அவ்விடம் விட்டு அகன்றனர். அங்ஙனமகன்ற மாந்தருட் சகோதரராவா ரிருவரும் தப்பியோடச் சக்தியற்று நரைதிரைமேலிட்டு வயோதிபதிசையையடைந்த அவர்கள் பெற்றோரு மிருந்தனர். நகரமாக்கள் விலையேறப்பெற்ற பொருட்களை யெடுத்துக்கொண்டு ஓடிப் போவதையும் அக்கினிப்பிரவாகம் அபரிமிதமாய் வருவதையும் அவ்விரு குமாரருங் கண்ணுற்றனர். உடனே அவர்களி லொருவன் தன் தந்தையையும் மற்றவன் தன் தாயையும் முதுகின்மீது தூக்கிக்கொண்டு, விலையுயர்ந்த தமது பொருட்கள் யாவையும் நாசமாகும்படி விட்டுவிட்டு ஓடிப்போய்த் தாமும் தம் பெற்றோரும் உயிர் பிழைத்தனர்.

மேற்கூறிய கதையிற் குறிப்பிக்கப்பட்ட குமாரர் தம் பெற்ருேரில் அன்புகூர்ந்து அவர்களை இரட்சித்ததுபோல, நாமும் நம்மைப் பெற்றவர்களை நேசித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய இஷ்டப்பிரகாரம் நடக்க முயல வேண்டும். அவர்கள் நமக்குக் காட்டிவரும் அன்பை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. அவர்களுக்கு நல்ல பெய ருண்டாகும்படி நாம் கடந்துகொள்ளவேண்டும். கல்விக் கென்று செலவிடுங்காலத்தில் நாம் கல்வியிலேயே கண்ணுங் கருத்துமுடையவர்களாய் அதில் விர்த்தியடையவேண்டும். கல்வி முடிந்து உத்தியோகத்திலோ அல்லது வேறு கடமை களிலோ நாம் பிரவேசிக்கும்போது, உத்தமன், நீதிமான் என்னும் பெயர்களை நாம் வகிக்கவேண்டும். நம் பெற் ருேருக்கு நாம் கடமை பூண்டிருப்பதுபோல வேருெரு வருக்கும் நாம் கடன்பாடுடையவர்களா யிருக்கின்ருேம். அவர் யார்? அவர் பரலோகத்திலிருக்கின்ற நம் பரம பிதாவாகிய தேவன். நாம் உயிரோடு ஜீவித்திருப்பதும், பொருள் சம்பாதிப்பதும், உண்பதும், உடுப்பதும், உறங்கு வதும் அவருடைய மகா பெரிய தயவுதான். நாம் விழித் திருக்கும்போதும் உறங்கும்போதும் அவர் ஒரு காவலாளி யைப்போலிருந்து நம்மைப் பாதுகாத்து வருகின்ருர். அவர் நம்மைத் தமது புத்திரராக நேசித்து வேண்டியவற்றை நல்கி அருள்புரிந்து வருகின்ருர். அவருக்கு நாம் விசே ஷித்த கடன்பாடுடையவர்களல்லவா? அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்குங் கைம்மாறென்ன? 'உத்தமனய் நடந்து நீதி யைக் கைக்கோள்' என்கிருர். இதுதான் அவர் கருதுங் கைம்மாறு. இந்தக் கைமாற்றை நாம் அவருக்குச் செலுத் தினல், நாம் என்றும் மாருத பேரின்ப வாழ்வையடைவோ மென்பது நிச்சயம்.



## 25. சிலந்திப்பூச்சி

சிலந்திப்பூச்சிகள் எல்லாம் ஒரு இனம் அல்ல, பல இனம்; அவற்றுள் அநேக ஜாதிகளுக்குக் கால் எட்டு, கண் எட்டு, கொடுக்கு இரண்டு, அன்றியும் வலை நெய்யும் உறுப்புக்களும் உண்டு.

சிலந்திப் பூச்சியைக்குறித்து மிகவும் அதிசயிக்கத்தக்க விசேஷம் அது நெய்யும் வலையே. செம்படவன் திரை கடலில் வலைவீசி மீன் பிடிப்பதுபோல, சிலந்திப்பூச்சி வலை வீசி இரை பிடிக்கும். இதன் முகப்பிலுள்ள படத்தில் சிலந்தி நூல்நூற்கும் விதத்தைக் காணலாம். சிலந்தி உடலின் அந்தத்திற்குச் சமீபத்தில் மிகவும் சிறிய துவாரங்கள் நானூறு ஐந்நூறுவரையும் இருக்கின்றன. அத்தனை துவாரங்களினின்றும் ஒவ்வொருநூல் வருகின்றது. ஆனதுபற்றி, சிலந்தி வலையின் மிக நுணுக்கமான பாகமும் தனி இழை

யால் அல்ல, இருநூறு முந்நூறு முறுக்கு இழைகளால் நெய்து உரு அமைந்திருக்கின்றது. ஆகவே, அவ்விழைகள் எளிதில் அறுவண்ணம் அதிக பலமாயிருக்கின்றன.

சிலந்திக் கொடுக்குகளில் விஷம் இருக்கின்றதனால் தீண்டினவுடன் அவ்விஷம் சிறு பூச்சி புழுக்களைக் கொல்லும். உருவிற் பருத்த சிலந்திஜாதி கொட்டுவதினால் உண்டாகும் வேதனை தாங்குவதற்கரிய கடுவேதனையா யிருக்கின்றதனால் மனுஷரும் அதற்கு அஞ்சிச் சாவதானமாயிருப்பார்கள்.

ஒருவகைச் சிலந்தி நூற்கும் இழை அதிகம் நீண்டு ஆகாயத்தில் யாதொரு ஆதாரமுமின்றி நீர்முகத்திற் கட்டைமிதப்பதுபோலக் கிளம்பும். சிலந்தி நூற்கும் நூல் வேண்டுமளவிற்கு நீண்டிருக்கும்பொழுது அதன் வழியாய் உயர ஏறி அது சிறு பூச்சிகளைப் பிடிக்கும். நீர்ச்சிலந்தி நீரின் கீழே சிறு வீடுகட்டி வாசஞ்செய்யும். சிலந்திஜாதிகளிற் சில வலை நெய்கிறதில்லை. வனத்திற் சஞ்சரிக்கும் கொடும் புலி சிறு விலங்கினத்தைப் பதிவிருந்து அசதியிற் பாய்ந்து விழுந்து அமர்த்திக் கொல்லுவதுபோல, சிலந்திகளும் தமக்கு எளிய பூச்சிகளை ஒரு தாவில் வேகமாய்த் தாவி விழுந்தடித்துக் கொன்று பட்சிக்கும். உடல் மிகவும் பருத்த சில ஜாதிச் சிலந்திகள் நெய்யும் வலைகளில் பூச்சி புழுக்களன்றி, சிறு குருவிகளும் அகப்பட்டு அவைகளுக்குப் பட்சணமாவது உண்டு.

மனுஷருக்கு அற்ப சிலந்திகளால் விளையும் பயன் என்ன? மனுஷரைப் பலவிதங்களிற் பீடிக்கும் ஈக்களை அளவிற்கு அதிகம் அபிவிர்த்தியாக விடாமற் சிலந்திகள் கொன்று தின்னும்.

## 26. விதைப்பும் அறுப்பும்

ஒரு குடியானவன் பக்குவமாய்ப் பண்படுத்திப் பயிர் செய்து பலவகைத் தானியமும் விளைவிக்கத்தக்க நீர்வளமுள்ள கழனி வைத்திருந்தான். அவன் விதைப்புக்காலத்தில் வெவ்வேறு முள்விதை, குருக்குவிதை, நெருஞ்சில் விதை, பின்னும் தானிய விளைவிற்கு நாசமான புல் பூண்டுகளின் விதையெல்லாம் சேர்த்துக் கூடைகூடையாக வயலுக்குக் கழுத்தொடியச் சுமந்துகொண்டுபோய் உதயாதி அஸ்தமன பரியந்தம் நாலைந்து தினம் எங்கும் தூவி விதைத்தான்.

அவன் இப்படிச் செய்வதைப் பார்த்து நின்ற உன் கண்ணுக்கு அச்சமயத்தில் அயலான் ஒருவன் எதிர்ப்படுவானுனல், நீ அவனுக்கு அந்தக் குடியானவன் செய்யும் விபரீதத்தைக் காட்டி, 'அந்த மனுஷன் தன் வயலிற் பகல் முழுதும் முள்ளும் குருக்கும் நெருஞ்சிலும் மற்றுமுள்ள முட்செடி விதையும் மனம் ஒப்பி விதைத்துக்கொண்டு வருகின்றுனே, இது என்ன புதுமை! உன்மத்தனன்றி, தெளிந்த யுத்தி புத்தி உள்ள ஒருவன் இப்படிச் செய்தது எப்பொழுதேனும் எவ்விடத்திலேனும் கண்டது கேட்டதுண்டா? இவனுக்கு யாது காரணத்தாலோ புத்திமாருட்டம் உண்டாயிருக்கவேண்டும். அல்லாவிடில் தன் வாழ்விற்கும் ஊர் உலகத்திற்கும் ஏற்காத இந்த விபரீதம் ஒருபொழுதும் செய்யான்' என்று பரிதபித்துச் சொல்வாயே.

ஆனுல், அந்தக் கிருஷிகன் செய்த செய்கை இம்மாத்திரத்தில் ஒழிந்துபோகாதே. அவன் விதைத்த முள் விதை எல்லாம் முளைத்து விரைந்து ஓங்கி வளர்ந்து மதர்த்துச் சிறிது காலத்திற்குள் வயல் எங்கும் படர்ந்து அடர்ந்த

குறுங்காடாகும். பின்பு அதை ஒன்றுந் தப்பவிடாமல் அடியோடே அறுத்துப் போர் போட்டு, அந்தக் குடித் தனக்காரனைப் பிடித்து இழுத்துக் கட்டிக்கொண்டு வந்து போர்மீது வைத்துப் பெயரவிடாமல் அடுத்துக்கட்டி, மேலே பாரம் வைத்து நெருப்புக் கொளுத்திவிடுவார்கள். இவ் வண்ணம் அவன் தன் கையால் விதைத்த விதை முளைத்து விளைந்து அறுத்து அடுக்கிய போரில் உயிரோடேபதைத்துத் துடித்து அலறத் தகிக்கப்படுவான். 'தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்.'

பிறந்ததுமுதல் இறக்குமளவும் எண்ணிலாப் பாவம் பழிபாதகம் செய்து நாட்கழிக்கும் மகா துரோகியும் அந்த மனுஷனும் சரி. அவன் விதைத்ததையே விளைந்தபின் அறுப்பது மெய்யானல், அந்த விளைவு என்றும் அவியாத எரிநரகில் துடிக்கப் பதைக்க அவன் ஜீவனை வருத்தி வதைக் கும் நித்தியவேதனையே தவிர வேறல்ல.

அந்தியகாலத்தில் தேவகாருண்யத்தால் குன்றாப் பெருஞ் செல்வமாகிய நித்தியஜீவன் என்னும் விளைவை அறுத்துச் சுகித்து வாழும்படி நல்விதை விதைக்க வகை பாருங்கள்.

## 27. கலகமும் சண்டையும்

### கிருஷ்ணனும் இராமனும்

கிருஷ்ணன்—நீ கோபாலுடன் கைகலந்து சண்டையிடப் போன காரணம் என்ன ?

இராமன்—அவன் நிந்தை சொல்லி என்னைக் கோப மூட்டினன்.

கிருஷ்ணன்—அது இருக்கட்டும், நீ அவனுடன் சண்டை யிடுவானேன் ?

இராமன்—அவன் முகம் பாராமல் வாயெழுந்து மனம் துணிந்து வசை சொன்னால் எனக்கு வாய் இல்லையா? நானும் வைதேன்; வைதவுடன் உறைக்க ஒரு அறை அறைந்தான். அவன் கையால் அடி வாங்கிக்கொண்டு ஊமை போல் ஒன்றும் பேசாமல் அவனுக்குப் பயந்துபோய்விட நான் மானம் கெட்ட மாடல்ல; மனுஷரென்று உடம்பெடுத்தவர்களுக்கு அவரவர் அந்தஸ்திற்குத் தக்க மானம் உண்டென்று அறியாயா! நீ ஒரு அறை அறைந்தால் நான் உனக்கு இரண்டு அறை அறைவேனென்று பதறாமல் அவனுக்குச் சொன்னேன்.

கிருஷ்ணன்—அப்படியானால் நீங்கள் இருவரும் ஒரு வெற்றெலும்புக்காகச் சண்டையிடும் பருந்துகளுக்குச் சமானராவீர்களே தவிர மனுஷர் அல்லவே!

இராமன்—என்ன சொல்லுகிறாய்! நினைத்துப் பேசு. அவன்மாத்திரம் பின்முன் யோசிக்காமல் திடீரென்று என் முகத்தில் உதிரம் தெறிக்கக் கை ஓங்கி ஒரு அறை அறைய, நான் அதைச் சகித்துக்கொண்டு விசாரமின்றி என் வழியே போய்விட மனம் ஒப்புமா?

கிருஷ்ணன்—ஒருவன் அறியாமற் செய்த அற்ப பிழையை நீ பொறுத்துக்கொண்டால் உனக்கு அதனாலுண்டாகும் கெடுதி என்ன? தன்னுயிரைப்போல மன்னுயிரில் அன்பு கூர்வது நமது கடனென்று உனக்குத் தெரியாதா? அவன் உன்னை அடிக்க வரும்பொழுது நல்வார்த்தை சொல்லி நீ தடுத்தாலும் தடுக்கலாம். உன் சொல்லைக் கேளாமல் அவன் அடித்தால் உபாத்தியாயருக்கு அறிக்கை செய்யலாமே.

இராமன்—ஆண்மையின்றி அப்படிச் செய்வது எனது சுபாவமல்ல. என்னை அடித்தவனை நானும் அடிக்காது விடுவேனோ? இடம் கிடைத்தால் அவனை நொறுக்கிக் கொன்றுபோடுவேன்.

கிருஷ்ணன்—உன் பதைப்பையும் துடிப்பையும் கடுப்பையும் பார்க்கும்பொழுது நீ அப்படித்தான் செய்வாயென்று தோன்றுகிறது. ஆனால் சற்றே ஆற அமர நினைத்துச் சொல்லு, உன்னை அடித்தவனை நீயும் திருப்பி அடிப்பது தர்மமா?

இராமன்—அவன் என்னை இல்லாத வசை சொல்லித் தூஷிக்கலாகாதே.

கிருஷ்ணன்—வாஸ்தவந்தான். நாலு ஆறு மாசத்திற்கு முந்தி அல்ல, நேற்றிராத்திரி அந்த அறியாத பயல் பொன்னனை நீ வாய்பதறித் தூறுசொல்லி வைதது செவியில் அறைந்தாற்போல எனக்குக் கேட்கவில்லையா? அவன் உன்னைக் கொல்லவா வந்தான்?

இராமன்—ஆகா! நல்லகேள்வி கேட்டாய்; அந்தச் சிறு பூச்சியா என்னைக் கொல்லுகிறது? ஒரு அறையில் நின்ற இடத்தில் அவனைக் கிறுகிறுத்துப் பிரேதமாக விழுத்த எனக்குத் திறமை இல்லையா?

கிருஷ்ணன்—சரிசரி, நீ பெரியவனாயிருப்பதனால் உன் இஷ்டப்படி ஒரு சிறுவனை நிந்தை சொல்லித் தூஷிக்கலாம்; அந்தச் சிறுவனோ உன்னை நிந்தை சொல்லலாகாது. நீ சொல்லும் நியாயம் இப்படித்தான் இருக்கிறது. நல்லது, என்னை நீ நிந்தை சொல்லி, அதற்காக நான் உன்னை அடித்தேனென்று வைத்துக்கொள். நான் அடித்தது உனக்குச் சமாதானமாயிருக்குமா? உன்னிலும் திடகாத்திரனாகிய நான் உன்னை ஒரு அறை அறைந்தால், உடனே இரத்தங்கட்டி முகம் கறுத்துப்போகுமே.

இராமன்—இல்லை இல்லை, உன்னிடத்தில் அடிபடுவது ஒருநாளும் எனக்குச் சம்மதமல்ல.

கிருஷ்ணன்—அப்படியானால், இனி ஒருபொழுதும் எவரோடும் சண்டையிடப் பதைக்காதே. ‘கோபம் பாவம்.’ இவ்

வண்ணம் எவருடனாவது சினங்கொள்வது உயிர்க்கொலை யென்று கடவுள் மொழிந்திருக்கிறார். 'ஆறுவது சினம்' என்பது ஔவை உணர்த்திய நீதிமொழி.

இராமன்—இன்றளவும் அந்த நீதி எனக்குத் தெரியாது; சண்டையிடுவது தைரியவான் இயற்கையென்று எண்ணி யிருந்தேன். இனி நான் இறக்குந்தனையும எவருடனும் சண்டையிடுவதேயில்லை; இது எனது பிரதிக்கினை.



28. தவளையும் சுண்டெலியும்

சுண்டெலி ஒன்று ஒருநாள் ஒரு ஆற்றங்கரையில் உட்கார்ந்து ஆறு கடந்து அக்கரைசேர வழி தெரியாமல் வெகு தூரம் யோசித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அண்டையில் வெயில் காய்ந்த வஞ்சனையுள்ள ஒரு கிழத்தவளை முகக்குறியாற் சுண்டெலியின் கருத்தை உணர்ந்து, இதற்கு ஏன் இத்தனை யோசனை பண்ணுகிறாய்; நான் உன்னை மெத்தவும் சந்தோஷத்துடன் சிறிதாயினும் வருத்தமின்றி அக்

கரையிற் சுகமாய்க் கொண்டுபோய் விடுவேன். மீனைப்போல நீரில் வாழும் எனக்கு நீச்சுப் பழக்கவேண்டுமோ? என்னுடன் எழுந்துவா என்று நயவஞ்சகம் சொல்லியது. அதுகேட்டு, சூது வாது அறியாத சுண்டெலி மனமகிழ்ந்து அதனுடன் போகச் சம்மதித்தது.

தவளை தன் இடுப்பிற் பலமான முறுக்குநூல் ஒன்றைச் சுற்றி, அதன் முனையைச் சுண்டெலியின் ஒரு முன்னங் காலில் தொடுத்து அதைத் தன் முதுகிலேற்றிக்கொண்டு ஆற்றிற் பாய்ந்து சென்றது. நட்டாற்றிற் போகும்பொழுது தவளை அசதியில் முழுக நினைந்துத் தலையை நீரில் அமிழ்த்தவும், சுண்டெலி நழுவி விழப்போகிற சமயத்திற் பதறி உதறி,

'ஐயா, தவளையாரே! இது என்ன துரோகம்! இதஞ் சொல்லி ஆசைகாட்டி இந்த நடு ஆற்றில் கொண்டுவந்து அநியாயமாக அமிழ்த்திக் கொல்லவா போகிறீர்கள்' என்று பரிதபித்துக் கூவ,

அந்தக் குணங்கெட்ட மண்டூகம், 'சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்குப் புத்தியில்லையா? இந்த ஆறுதாண்டி அக்கரையில் உன்னைச் சுகமாய்க் கொண்டுபோய்ச் சேர்ப்பேனென்று நான் சூதாகச் சொன்ன சொல்லை நம்பி என் முதுகில் ஏறிவரத் துணிந்த முழுமூடனாகிய உன்னை அமிழ்த்திக் கொல்வது நியாயந்தான். இனி உன் பாடு' என மொழிந்து அமிழ்ந்தி முழுகியது.

அச்சமும் விசனமும் நிறைந்துள்ள சுண்டெலி தன் ஒழிவுகாலத்திற்கு நேர்ந்த அவகதியைக்குறித்து மனம் நொந்து தன்னைத் துர்மரணத்திற்குத் தப்புவிக்கும்படி தவளையை இரந்துகேட்பது வியர்த்தமென்றெண்ணி வாய் திறவாதிருக்கக் கொடிய மனமுள்ள தவளை அதை நீரின் கீழே

விரைந்து இழுத்துக்கொண்டு போயிற்று. அப்பொழுது ஆகாயத்தில் உயரப் பறந்த கொக்கொன்று ஆற்றிற் சுண்டெலி தத்தளிப்பது கண்டு விரைந்து விழுந்து அமர்த்தி இராஞ்சிக்கொண்டுபோய்த் தன் கூட்டிற் சேர்த்தது. அதன் காலிற்கட்டிய நூலின் ஒரு முனை தவளையின் இடுப்பிற்சுற்றி இருந்ததனால் தவளை அதனுடன் கிளம்பிக் கொக்கின் குரம்பையிற் சேர்ந்தது.

அதைக் கண்டவுடன் கொக்கு 'ஐயையா தவளையாரே! தாங்கள் இங்கு வந்த காரணம் என்ன?' என்று ஆச்சரியத்துடன் வினவ, பதைத்து நடுங்கிப் பதறி உதறிக் குலைகுலைந்த தவளை, 'நான் இங்கு இப்பொழுது வந்த காரணத்தை என்னென்று சொல்வேன்! எனது கெடுநினைவு என்னை இங்கே இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. சுண்டெலியை இதஞ் சொல்லி ஆற்றிற் கொண்டுபோய் அமிழ்த்திக் கொல்லப் பார்த்த எனக்கு இந்தக் கொடிய ஆபத்துச் சம்பவித்தது' என்று உத்தரம் சொல்லியது.

அதுகேட்டு, கொக்கு 'சொல்லக்கேள் தோழா! தஞ்சமென்று அடைந்தவனை அடுத்துக் கெடுக்க நினைந்து மோசஞ் செய்த உனக்குத் தகுதியென்று உலகம் ஒப்புக்கொள்ளத்தக்க தண்டனையை இந்தக்ஷணமே செய்யாது விடுவது தர்மமல்ல. உன் துரோகத்திற்குப் பிராணதண்டனை ஒன்றுதவிர வேறில்லை' என்றுரைத்து, தன் வாயை அகலத் திறந்து வஞ்சக நெஞ்சுள்ள மண்டூகத்தை ஒரு கவ்வாகக் கௌவி அதக்கி விழுங்கியது.

## 29. தின மூட்டை

நீ தோளில் ஒரு மூட்டை வாதுமைப்பருப்பு எடுத்துக் கொண்டு போவதாக வைத்துக்கொள்வோம். போகும் வழியில் உன் கண்ணுக்கு எதிர்ப்படும் சிறுவர் சிறுமியர் யாவரும் உன்னைக் கெஞ்சிக் கேட்க அவர்களுக்குத் தலைக்கொரு பருப்புக் கொடுத்துக்கொண்டு போவாயானால், அரை நாழிகைக்குள் வெறும் மூட்டை இருக்க, பருப்பெல்லாம் செலவாய்ப்போகுமே.

இப்பூவுலகில் நம்மெல்லாரையும் கடவுள் தலைக்கு ஒரு மூட்டையுடன் அனுப்பியிருக்கிறார். அது வாதுமைப்பருப்பு மூட்டை அல்ல, தின மூட்டை. சிறு குழந்தை தின மூட்டையைச் சுமந்துகொண்டு நெடுந்தூரம் செல்லுமுன்னே சிலவேளை மரணம் அதை வழிமறித்து, அவ்வளவில் அதன் வாழ்நாள் முடிவாய்ப்போவதும் உண்டு. ஒருவேளை நீங்கள் சிரஞ்சீவிகளாய் இருந்தாலும் இருப்பீர்கள். ஆனால், ஒன்றை மறவாது நினைத்துக்கொள்ளும்படி உங்களுக்கு வருந்திப் புத்தி சொல்லுகிறேன். நீங்கள் தின மூட்டையைச் சுமந்துகொண்டு செல்லச் செல்ல, காலம் என்பது இரவும் பகலும், எப்பொழுதும் ஒழிவின்றி உங்களைத் தொடர்ந்து, உங்கள் பைக்குள்ளிருந்து ஒவ்வொரு தினத்தை எடுத்துக் கொண்டு வருகின்றது. எடுக்க எடுக்க எவ்வளவு பெரிய மூட்டையும் விரைவில் வெறுமூட்டையாய்விடும்.

மனுஷர் சுமந்துகொண்டு வழிநடக்கும் மூட்டைகள் வாதுமைப்பருப்பு மூட்டைகளாயிருந்தால் தோளிற் பொறுத்த சுமை வரவரக் குறைந்து இலேசாவது கண்டு, பருப்பு எடுத்த திருடன் யாவனென்று ஆத்திரத்துடன் கேட்பார்கள். ஆனால், தாம் சுமந்துகொண்டுபோகும்

தின மூட்டை நித்தமும் கனம் குறைந்துவருகிறதென்று வெகு ஜனங்கள் சொப்பனத்திலும் எண்ணுகிறதில்லை. பின்னும் வெகு ஜனங்களுக்கு அதைக்குறித்து எள்ளள வாயினும் சிந்தனை உண்டாகுமுன்னரே, அவர்கள் மூட்டை களில் வைத்துக் கட்டிய தினங்கள் முக்காலே மூன்று வீசம் செலவாய்ப் போயினவென்று காண்பார்கள்.

அன்றன்று இராத்திரி காலத்தில் நாம் படுத்துக்கொள் ளப் போகும்பொழுது நமது மூட்டைகளிலிருந்து பின்னும் ஒரு தினத்தைக் காலம் என்னும் திருடன் கவர்ந்துகொண் டனனென்று ஒருபொழுதும் நினையாது மறந்துவிடலாகாது. காலம் என்பது நமக்குக் கட்டிப்பொன்னிலும் விலை உயர்ந்த திரவியம். அதை நாம் வியர்த்தமாய்ப் போக்கடிக்கக் கூடாது. ஆகவே, நாம் பிராணனோடிருக்கும்பொழுது, நமக்குப் பின்னுக்கு உதவும் நற்குண நற்செய்கைகளில் வர வரத் தேறவும், நமது பாவ அழுக்கு நீங்கி நமக்குச் சித்த சுத்தி உண்டாகவும் நாம் வருந்தி முயன்று வகையறிந்து கொள்ளவேண்டும். இப்படிச் செய்து நாம் விருத்ததசை அடையுமளவும் ஜீவனோடிருப்போமானால், நமது பையில் செலவாகாமல் இருக்கின்ற சில தினங்களைக் காணும்பொ ழுது நமக்கு விசனம் மிஞ்சிப் பெருமூச்சு வராது. கழிந்த தினம் அனைத்தும் வினை ஒழிந்து வீணிற் கழிந்தனவென்று மனம் நொந்து வருந்த நமக்கு நிமித்தமும் இராது.

'தேவனே! எங்கள் மனம் ஞானத்தில் முதிரும்பொ ருட்டு நாங்கள் எங்கள் வாழ்நாட்களை எண்ணும்படி போதித் தருளும்' எனத் தேவன் அருளிய வேதபுத்தகத்தில் உள்ள பிரார்த்தனை மிகவும் உசிதமான பிரார்த்தனையே. நமது தின மூட்டையைக் குறித்துப் பெரும்பாலும் நினைத்து அதை அவிழ்த்துப் பார்த்து, காலம் கவர்ந்துகொண்ட தினம் இத்தனையென்றும் மூட்டையில் மீந்திருக்கின்ற தினம் இத்

தனையென்றும் கணக்கிட்டு வருவோமாக. பிரதிதினத்தை யும் பெரும் பயன் உண்டாகும்படி பிரயோகித்து வருவது மன்றி, நமது தினங்களை நாம் அலட்சியம் செய்யாமலும், தகாத செய்கைகளிற் போக்காமலுமிருக்கும்பொருட்டு, மேற்குறித்த திவ்வியமான ஜெபத்தைப் பரம பிதாவை நோக்கி ஜெபித்துவரக்கடவோம்.

## 30. தாதுலக்ஷணம்

பிள்ளைக்கும் பிதாவுக்கும் நடந்த சம்பாஷணை

பிள்ளை—அப்பா! உலகத்திற் பலவகைத் தாதுக்கள் இருக்கின்றன அல்லவா?

பிதா—ஆம் மகனே, முன்பின் ஐம்பது வகைத் தாதுக்கள் உண்டு. நீ அறிய விரும்பினால் அவற்றுள் விசேஷமான தாதுக்களின் லக்ஷணத்தைக்குறித்து உனக்குச் சொல்வேன்.

பிள்ளை—ஆமாம், தாதுக்களைப்பற்றி நீங்கள் சொல்வதைக் கேட்க விரும்புகின்றேன் சொல்லுங்கள்.

பிதா—நல்லது சொல்லுகிறேன். தாது என்பது யாது? இதை முதல் முதல் யோசித்துப் பார்ப்போம். நீ ஒரு தாதையும் கல்லையும் கண்டால் இன்னது தாது, இன்னது கல் என்று பகுத்தறிந்துகொள்வாயா?

பிள்ளை—ஒரு கல்லா!—அது எனக்கு நன்றாய்த் தெரியும். எப்பொழுதும் பார்த்திருக்கிறேன். ஒரு காரீயத்துண்டைக் கண்டால் அது காரீயம் என்றும், ஒரு துண்டு இரும்பைக் கண்டால் அது இரும்பு என்றும், ஒரு கல்லைக் கண்டால் அது கல் என்றும் திட்டமாய் அறிந்துகொள்வேனே தவிர, காரீயத்தை, அல்லது இரும்பைக் கல் என்று ஒருபோதும் இனப்பிசகாய் எண்ணமாட்டேன்.

பிதா—மகனே! நீ ஈயத்தை ஈயமென்றும், இரும்பை இரும்பென்றும், கல்லைக் கல்லென்றும் நிதானமாய்ப் பகுத்துணரும் வகை என்ன?

பிள்ளை—ஈயம் முதலிய தாதுக்களுக்குக் காந்தியும் மினுக்கும் உண்டு.

பிதா—மெய்தான். காந்தி என்பது தாதுலக்ஷணங்களில் ஒன்று. ஆனால் நீ சொன்ன தாதுக்களைப்போல, கண்ணாடியும் படிகமும் அதிக காந்தியுள்ளவைகளாயிருக்கின்றனவே. இதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறாய்?

பிள்ளை—கண்ணாடியைப்போலத் தாதுக்களும் காந்தியுள்ளவைகளாயிருந்தும், கண்ணாடிக்கு உள்ள வேறொரு லக்ஷணம் தாதுக்களுக்கு இல்லை. கண்ணாடியில் உருவத்தைக் காணலாம்; தாதுக்களில் உருவம் தெரியாது.

பிதா—சரி. தாதுக்களுக்குக் காந்தி உண்டெனினும் உருவொளித்தன்மை இல்லை. அவை இருளடைந்திருக்கின்றன. கண்ணாடிக்கு உருவங்காட்டி, ஆதரிசனம், ஒளிவட்டம் என அதன் விசேஷ இயற்கையை விளக்கும்பொருட்டு வெவ்வேறு பெயர் வழங்கும்.

பிள்ளை—தாதுக்கள் இருளடைந்திருப்பதுமன்றி, கனமுமுள்ளவைகளாயிருக்கின்றன.

பிதா—பொதுவாகத் தாதுக்களுக்குக் கனம் உண்டு; ஆனால் சில தாதுக்கள் தண்ணீரைக்காட்டிலும் இலேசாயிருக்கின்றன. அது நிற்க, தாதுக்களுக்கும் கல்லுக்கும் வேறு என்ன பேதம் உண்டு? நினைத்துச் சொல்லு.

பிள்ளை—இன்னும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது; சம்மட்டியால் அடித்தால் தாது பின்னப்படாது. கல்லை அடித்தால் அது சின்னபின்னமாய்த் தகர்ந்துபோம்.

பிதா—ஆம், சம்மட்டியால் அடிக்க அடிக்கத் தாது அகன்று தகடாகும். அடிக்கு அகலும் தன்மை தாதுக்களுக்கு உண்டு; இதன்றி, இழுக்க இழுக்கக் கம்பியாக நீளும் இயற்கையும் தாதுக்களுக்கு இருக்கின்றது. இவ்விரு தன்மைகள் இருக்கிறதனால் தாதுக்கள் மனுஷருக்கு மெத்தவும் பிரயோஜனப்படுகின்றன.

பிள்ளை—இம்மாத்திரந்தானா? தாதுக்கள் உருக்க உருகுமல்லவா?

பிதா—ஆம், தாதுக்கள் அனைத்தும் உருகும். ஆனால், சில தாதுக்கள் வெப்பம் அதிகரித்தாலன்றி உருகாது. திண்மையுள்ள தாதுக்கள் வெப்பத்தால் நெகிழ்ந்து உருவழியும் இயற்கைக்கு உருகுந்தன்மையென்று பெயர். தாதுக்களைக் குறித்து இன்னும் ஏதாயினும் உனக்குத் தெரியுமா?

பிள்ளை—தெரியாது. ஆனால் ஒன்று என் ஞாபகத்தில் வருகின்றது; தாதுக்கள் பூமியில் விளைந்து மனுஷர் கையால் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன.

பிதா—அதையும் ஒரு தன்மையாகச் சேர்த்துக்கொள்வது முறைமைதான். மேற்கூறிய அனைத்தையும் தொகுத்துச் சொல்லில், தாதுலக்ஷணங்கள் காந்தி, இருட்சி, கனம், அடிக்க அடிக்க அகலும் தன்மை, இழுக்க இழுக்கக் கம்பியாக நீளும் தன்மை, உருக்க உருகும் தன்மை, பூமிக்குள் விளையும் தன்மை என்பவைகளே.

## 31. சீனர் பாடசாலை

சீனா என்பது இந்தியாவிற்குக் கீழ்த்திசையில் இருக்கின்ற ஒரு பெருந்தேசம். எத்தேசத்திலும் சீனாவிற் குடிஜனம் அதிகம். அங்கே வசிக்கும் ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கு ஜனம் சீனர்.



சதுர் வடிவாகிச் சப்பளிந்த முகமும் சிறுத்துச் சரிந்த கண்ணுமுள்ள சீனருடைய நிறம் மஞ்சள். அவர்கள் உச்சியில்மாத்திரம் சிறு குடுமிவிட்டுத் தலையைச் சிரைத்துக் கொள்வார்கள். அது காலக்கிரமத்தில் பசு வாலுக்கு ஒப்பாக நீளமாய் வளரும். உச்சிக்குடுமியைத் தலையிற் சுருளாகச் சுற்றிக் கட்டிக்கொள்வார்கள். சீனருக்கு அவர்கள் குடுமி மிகவும் அருமையானது. அவர்கள் தங்கள் தலை போனாலும் குடுமியை அறுக்கவிடார்கள்.

சிறிய பாதம், அல்லது சிற்றடி பெண்பாலார்க்குச் சிரேஷ்ட அலங்காரமென்று சீராட்டப்படும். உயர்குலத்திற் பிறந்த பெண்களுக்கு இளம்பருவத்திற் பாதத்தை அடக்கி, ஒடுக்கிக் கட்டிச் சிறுக்கும்படி செய்வதனால் அவர்கள் எப்பொழுதும் நொண்டி நொண்டி நடப்பார்கள்.

சீனருடைய புத்தகங்கள் வெகு நூதனமானவைகள். அவர்கள் நம்மைப்போல வாக்கியங்களை இடபக்கத்தினின்று

வலபக்கத்திற்கு வரிவரியாக எழுதுகிறதில்லை. தலைப்பி லிருந்து அடுக்கிச் சொல்லின்கீழ் சொல் அடுத்துவரப் பந்தி பந்தியாக எழுதுவார்கள். அவர்கள் அந்தந்தப் பக்கத் தின் அடியில் உள்ள கடைசி மொழிதொடங்கித் தலைப்பில் உள்ள முதல் மொழிவரையும் ஊர்த்துவமுகமாய் வாசித் துக்கொண்டு போவார்கள். இத்தேசத்தில் நாட்டகத்துப் பாடசாலைகளில் எப்படியோ அப்படியே சீனாவிலும் பிள்ளை கள் உட்கார்ந்திருந்து அவரவர் பாடத்தை ஆடி ஆடிக் குரலெடுத்து கூவிப் படிப்பார்கள். சொன்னதைச் சொன்ன படி திருப்பிச் சொல்லும் கிளியைப்போல அவர்கள் குறித்த பாடத்தை நெட்டுருப் பண்ணுவதொழிய, அதன் அர்த்தம் அவர்களுக்குத் தெரிகிறதில்லை.

இப்பாடத்தின் மத்தியில் உள்ள படத்தில் உபாத்தியா யர் ஒரு பீடத்திற் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதையும், சிறுவன் ஒருவன் பக்கத்தில் உபாத்தியாயருக்கு முதுகு காட்டிக்கொண்டு எழுந்து நிற் பதையும் காண்கிறோம். படித்த பாடத்தை ஒப்பிக்கும் பொழுது திறந்துவைத்திருக்கும் புத்தகத்தைச் சிறுவர் பார்க்காதபடி அத்தேசத்தில் இவ்வழக்கத்தை அனுசரித்து வருகிறார்கள். கல்வி கற்பிக்கும் ஆசானுக்கு மாணாக்கன் முதுகு காட்டிக்கொண்டு நிற்பது மரியாதைத் தாழ்வென்று அவர்கள் எண்ணுகிறதில்லை. ஆகவே, சீனர் பாஷையில் 'புத்தகத்திற்குப் புறங்காட்டி நிற்றல்' எனும் மொழித் தொடருக்குப் படித்த பாடத்தை உபாத்தியாயர் முன்னிலை யில் ஒப்பித்தல் என்று அர்த்தமாம்.

அதிபூர்வகாலத்திற் சீனர் சிறிது நாகரிகம் பயின்று சீர் திருத்தம் அடைந்திருந்தனர். ஐரோப்பியருக்கும் சீனருக் கும் பழக்கமுண்டாக நெடுநாள் முந்தியே சீனருக்கு அச்சிடு முறையும், காகிதம் செய்யும் வகையும், காந்தப் பெட்டியிற்

திசை பார்த்து மரக்கலம் செலுத்தும் இரகசியமும் தெரியும். பின்னர் அவர்கள் கல்வியிலும் நாகரிகத்திலும் மேனு மேலும் அபிவிர்த்தியின்றி அநேக சகாப்தம் செல்லுமளவும் நின்ற நிலையில் நின்றார்கள். தொன்றுதொட்டுள்ள தேசாசாரம், குலதர்மம், மதாசாரம் முதலிய சம்பிரதாயங்களைப் பகுத்தறிவின்றிக் குருட்டுப்பிடியாகக் கைவிடாது அனுசரித்து இதரதேச மனுஷரை எளனஞ்செய்துகொண்டு வந்ததே அவர்கள் நாகரிக அபிவிர்த்தி சூனியத்திற்கு முக்கிய காரணமாம். சீனர் தங்கள் தேசத்தை 'மத்திய ராஜ்யம்' என்றும், 'புஷ்பதேசம்' என்றும், 'விண்ணுலகு' என்றும் வியந்து கூறுவார்கள். அன்னிய தேசத்தாரை 'மிலேச்சர்' என்றும், பரதேசிகளாகிய 'பைசாசர்' என்றும் அபவாதம் கூறி இகழ்வது அவர்கள் வழக்கம்.

## 32. சிலந்திப்பூச்சியும் புரூஸ் தளபதியும்

ஐந்நூறு ஐந்நூற்றைம்பது வருடங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தை அரசாண்ட மன்னன் யுத்தஞ்செய்து ஜயித்து ஸ்கொத்லாந்தைக் கட்டி ஆள எத்தனித்தான். பகைஞராகிய ஸ்கொத்லாந்தர் பட்சத்திற் சேனாதிபதி ராபர்ட் புரூஸ் என்பவன். அங்கிலேய மன்னன் வைத்து நிர்வகித்த சேனை அதிக பலபராக்கிரமமுள்ளதாயிருந்தது. ஆனது பற்றி, அடுத்தடுத்து நடந்தேறிய அநேக யுத்தங்களில் அந்த புரூஸ் என்னும் தளகர்த்தன் அபஜயப்பட்டுப் பலவாறு கஷ்ட நஷ்டமடைந்து மிக வருந்தினான். அறுதியில் அவன் அங்கிலேய தளத்தை முறியடித்து வென்று தன் தேசத்திற்குச் சுவாதீனம் உண்டாக்கினான். சில சமயங்களில் ஜீவனத்திற்கு வழியின்றி அவன் வேட்டையாடி, அகப்படும் விலங்கினத்தைப் புசித்துக் காலங் கழிக்கும்படி

சம்பவித்தது; அயர்லாந்தின் வடகரையை அடுத்துள்ள ஒரு சிறு தீவில் அவன் பல மாசகாலம் புகலடைந்திருந்தான்.

திரும்பத் திரும்ப உண்டான பலவித அவஸ்தைகளையும் ஆபத்துக்களையும் அனுபவித்துத் தேகம் இளைத்து மனம் சலித்துச் சத்துருவின் கண்ணுக்குத் தென்படாமல் ஒளிப்பிடம் தேடித்திரிகையில், புரூஸ் தளபதி ஒரு தருணத்திற் சிறிய குடிசை ஒன்றைக்கண்டு அதிற் புகுந்திருந்தான். அவன் அதுவரையில் பட்ட பாட்டை உற்று நினைத்து, இனித் தன் தேசத்தாரை அங்கிலேய அரசனுடைய அதிகாரத்தினின்று விலக்கிச் சுவாதீனராக்கும்படி தொடங்கிய கருமத்தைச் சிதறாமற் சாதிக்கத் தன்னால் ஆற்றாதென்று முயற்சிசெய்யாது விட்டுவிட எண்ணினான். இப்படி எண்ணியிருக்கையில், ஒருநாள் அதிகாலையில் அந்தக் குடிசைக்குள் வெறும் தரையிற் படுத்திருக்கும்பொழுது முகட்டில் ஒரு சிலந்திப்பூச்சியைக் கண்டான். அது வலை நெய்யும்படி நூலின் ஒரு முனையை ஒரு உத்திரத்திற் கட்டி, மற்றொரு உத்திரத்தைத் தாவிப் பிடித்து மறு முனையைத் தொடுக்க அந்த நூலில் ஊஞ்சலாடியது. அது ஒருமுறை அல்ல, திரும்பத் திரும்பப் பலமுறை அவ்வுத்திரத்தைத் தாவிப் பிடிக்க மிக்க அவாவுடன் முயற்சி செய்தும் பலிக்கவில்லை. புரூஸ் என்பவன் அவதானமாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, அவ்வெளிய பூச்சி நூலில் ஊஞ்சலாடி உத்திரத்தை எட்டிப்பிடிக்க ஆறு விசை எத்தனித்தும் அவ்வாறு விசையும் அவ்வெத்தனம் வியர்த்தமாய்ப் போனதை எண்ணிக் கணக்கிட்டான். பின்பு தானும் அங்கிலேய சைநியத்துடன் ஆறு தடவை சமர்க்களத்திற் பொருதி ஆறு தடவையும் அபஜயப்பட்ட நினைவு அப்பொழுது அவன் மனதில் வந்தது.

செய்த முயற்சியைச் சிலந்திப்பூச்சி மனம் சலித்து விட்டுவிடவில்லை; ஏழாவது முறை அதிக வேகத்துடன்

ஊஞ்சலாடி நினைத்தபடி உத்திரத்திற் சேர்ந்தது. அதைக் கண்டவுடன் அவ்வரசன் படுத்த படுக்கையினின்று திடீ ரென்றெழுந்து, இச்சிறு பூச்சி, மனம் சலிக்காமற் செய்த முயற்சியைச் சிந்திக்குமளவில் எடுத்த கருமத்தைக் கை சோரவிடாது பலகால் திருப்பிச் செய்துகொண்டு வருவது புத்தியென்று எனக்குத் தோன்றுகிறது. இவ்வெளிய ஜெந் துக்குள்ள புத்தி எனக்கில்லாமற்போனது மெத்தவும் ஆச் சரியம். அது செய்தபடி நானும் பொறுத்து உழைத்துக் கருதிய கருமத்தைச் சிதருது முடிக்கப் பார்க்கவேண்டும். பராக்கிரமத்தில் மிஞ்சிய பகைவன் தளம் என்னை ஆறு யுத் தங்களில் அபஜயப்படுத்தியதல்லவா? இன்னும் இளைத்துப் பின்னிடைந்து நிற்காமல் யுத்தஞ்செய்துகொண்டு வருவேன். அறுதியில் எனக்குத் தவருது ஜயம் உண்டாகும். 'வெற் றியும் தோற்பும் ஒருவன் பட்சமல்ல' என மொழிந்து, முன் பட்ட அவஸ்தைகளை முழுதும் மறந்து மீளவும் சமர்புரியத் தொடங்கினன்.

அதன்பின் அவன் ஒருபொழுதும் அபஜயப்பட்டதில்லை. பன்னேக்பர்ன் என்னும் இடத்தில் நடந்த யுத்தத்தில் தொகை பெருகிய தளத்துடன் நெருங்கிவந்து சண்டை யிட்ட அங்கிலேய அரசனை அவன் முறியடித்து வெற்றி சிறந்து, ஈற்றில் ஸ்கொத்லாந்திற்குச் சுவாதீனமுண்டாக் கினன்.

## 33. சூரியன்

சூரியன் வெவ்வேறு தூரத்தில் தன்னைச் சுற்றிவரு கின்ற பல அண்டங்களுக்கு வெப்பமும் ஒளியும் கொடுக் கின்றது. அவ்வண்டங்களுக்குக் கிரகங்கள் என்று பெயர். அவைகளில் ஒன்று நாம் வாழ்ந்திருக்கின்ற இப்பூமி.

சூரியனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்க்கும்பொழுது சிலவேளை அதன் மேற்புறத்தில் அங்கங்கே களங்கம் தோன்றும். அந்தக் களங்கங்கள் சூரிய விம்பத்தில் கிழக்கிலிருந்து மேற்கு முகமாய்ப் படர்ந்திருப்பதாகக் ககோள சாஸ்திரிகள் கண்டறிந்தார்கள். அன்றியும் அவை தோன்றி மறைந்து மீளவும் தோன்றச்செல்லும் காலத்தைக் கணக்கிட்டு, ஆதித்தன் இருபத்தைந்து தினத்தில் ஒரு வட்டம் சுழலுகிறதென்று நிச்சயித்திருக்கிறார்கள்.



ஆதித்தன் பெரும்பாலும் எரிகின்ற ஆவி திரண்டு உருவாகியது. ஒரு பாண்டம் நீரை அடுப்பில் வைத்துக் காய்ச்ச, அது சுண்டி ஆவியாகப் பரிணமித்துப் போய் விடும். சூரியவெப்பம் அபரிமிதமாயிருப்பதனால் இரும்பும் அதில் வெந்து உருமாறி ஆவியாய்ப் போகின்றது. சில சமயங்களில் எரிகிற சுவாலை இரண்டிலட்சம் மைல் உயரத்திற்கு வளரும். சூரிய விம்பத்தில் தோன்றும் மறுக்கள் தீப்பற்றி எரிகின்ற மேகங்களின் மத்தியில் உண்டாகும் பெரும் பிளப்புகள், அல்லது பள்ளங்களென்று உத்தேசிக்கப்படுகின்றன. மேலும் நமக்குத் தோன்றும் விருத்

தாகாரமான ஆதித்தனுக்கு அப்பாலும் இலட்சாதிலட்சம் மைல்தூரம் தேஜோமயமான ஆவி எட்டியிருக்கின்றது. அளவிற்கு அளவு பார்க்குமிடத்தில் பூமி சூரியனிலும் நான்கு மடங்கு கனமுள்ளது.

சூரியனைச் சந்திரன் மறைக்கும்பொழுது சூரிய கிரகணம் என்று சொல்லுகிறோம். சந்திரன் பூமியை நாலு வாரத்திற்குள் ஒரு வட்டம் சுற்றி வருகின்றது. அது பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வந்து மூன்றும் நேராக நிற்கும் பொழுது சூரிய கிரகணம் உண்டாம். அது பூரண கிரகணம். சூரிய விம்பம் முழுதும் மறையாதிருந்தால் அதற்குப் பாரிச கிரகணம் என்று பெயர். அமாவாசையி



லன்றிச் சூரிய கிரகணம் உண்டாகாது. சந்திரன் சாதாரணமாய்ச் சூரியனுக்கும் பூமிக்கும் நேரே மத்தியில் வாரமல் ஒரு பக்கம் சற்று விலகி நிற்பதனுல் சூரிய கிரகணம் மாசந்தோறும் உண்டாகிறதில்லை.

கிரகணம் உண்டாகும் காலத்தையும் அதன் பரிமாணத்தையும் ககோள வித்தியா பண்டிதர்கள் முந்தியே கணித்துச் சொல்வார்கள். இராகு கேது என்னும் சர்ப்பங்கள் சூரிய சந்திரரை விழுங்குவதனுல் கிரகணம் உண்டாகிறதென்று நிர்நிமித்தமாக நினைத்து விபரம் தெரியாத சில பாமரர்கள் கிரகணத்திற்கு மிகவும் அஞ்சுகிறார்கள். சீனரும் காப்பிரிகளும் கிரகணகாலத்தில் அந்தச் சர்ப்பங்களை வெருட்டித் துரத்தும்பொருட்டுப் பேரொலி உண்டாகப் பறை முழக்குவார்கள். கிரகணம் அபசகுனமல்ல, அதனுல் நமக்கு ஒரு விக்கினமும் இல்லை.

## 34. பூமியின் தினகதி

இராத்திரி காலத்தில் மந்தாரம் இல்லாதிருக்கும்பொழுது வீட்டினின்று வெளிப்பட்டு வானத்தை அண்ணாந்து பார்ப்போமாயின் எண்ணிறந்த தாரகைகள் நமது சிரசின்மேற் பளிச்சென்று பிரகாசிப்பதைக் காண்போம். உடனே நாம் வீட்டுக்குள் திரும்பிவந்து நாலைந்து நாழிகை சென்று மீளவும் வெளியே போய் நின்று பார்த்தால் அந்த நட்சத்திரங்கள் முன் நின்ற இடத்தைவிட்டு விலகி வேறிடத்தில் நிற்பதாகத் தோன்றும். பட்டை தீர்ந்த வயிரமணிகளை அணியணியாய் எங்கும் அடரப் பதித்திருக்கும் பாவனையைக் குறிப்பிக்கின்ற வெகு விஸ்தாரமான ஆகாயமண்டலம் கிழக்கினின்று நமது தலைபைச் சுற்றி மேற்கே பெயர்ந்து போவதுபோல நமது திருஷ்டிக்குத் தோன்றும்.

எண்ணிறந்த தாரகா கணத்துடன் எங்கும் விரிந்து விதானம்போற் கவிந்திருக்கின்ற வானமும், விண்மணி எனப் பெயர் வழங்கும் ஆதித்தனும் பூமியைச் சுற்றி ஓடுவதாக வெகு வருஷகாலம் மனுஷர் எண்ணிக்கொண்டிருந்தனர். பின்பு அறிவின்மிக்கோர் எண்ணித்தொலையாத தாரகைத் திரளையும், அத்தாரகைகளுக்கும் தமக்கும் உள்ள வெகு தூரத்தையும் தீர்க்க சிந்தனை செய்து வரும்பொழுது தமது கண்ணுக்குத் தோன்றும் காட்சிக்கு மேற்குறித்த காரணத்திலும் மிக எளிதாக உணரத்தக்க வேறு காரணம் யாதாயினும் இருக்கவேண்டுமென்று சில நிபுணருடைய சிந்தனையிற்பட்டது.

நீங்கள் ஒரு வண்டியிற் சவாரிபோகும்பொழுது சாலையின் இருமருங்குமுள்ள விருட்சங்கள் செடிகள் உங்களுக்கு எதிர்முகமாய் ஓடுவதாகத் தெரியும். நீங்கள் இருப்புப்பாதையின்மீது வண்டித்தொடரில் ஏறிச் செல்லும் தருணத்தில்

மற்றொரு வண்டித்தொடர் ஒரு நிலையாக நின்றால், அவ்விரு தொடரில் ஓடும் தொடர் எதுவென்றும் நிற்கும் தொடர் எதுவென்றும் நிதானமாய்ப் பகுத்துணர்ந்து சொல்லத் தெரியாமல் மனந் தடுமாறுவீர்கள். நமது சிரசின்மேல உயர்ந்த வானத்திற் பிரகாசிக்கும் ஆதித்தனும் நட்சத்திரங் களும் கீழ்த்திசையினின்று மேற்றிசை முகமாய்ச் செல்லு கின்றனவா, அல்லது நாம் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ச் செல்லுகின்றோமா என்னும் விவகாரத்தை இப்பொழுது எடுத் துக்காட்டிய திருட்டாந்தத்தால் எளிதில் சந்தேகமறத் தீர்த் துக்கொள்ள மாட்டுவீர்கள்.

எரிகிற தீபத்தின் எதிரில் ஒரு கிச்சிலிப்பழத்தைக் கை யிற் பிடித்துக்கொண்டிருந்தால் தீப முன்னிலையில் உள்ள அதன் பக்கம் வெளிச்சமாயிருக்கும். அந்தப் பழத்தை மெதுவாகத் திருப்பினால் முன் இருளாயிருந்த பக்கம் வர வர வெளிச்சமாக, வெளிச்சமாயிருந்த பக்கம் இருண்டு போம். பூமி சுழன்று பகலும் இரவும் ஒன்றை ஒன்று அடுத்துத் தொடர்வது இவ்வண்ணமே. பூமி சுழன்று வரும்பொழுது அதில் நிற்கும் மனுஷர் கண்ணுக்குப் பூமி நிலைபெயராது நிற்க, ஆதித்தன் தம்மைச் சுற்றி வருவதாகத் தோன்றும்.

பகலவனாகிய சூரியன் மத்தியஸ்தானத்தில் நிற்க, பூமி யும், புதன், சுக்கிரன் முதலிய இதர கிரகங்களும் விருத்தா காரமாய் அதைச் சுற்றிவருகின்றன.

## 35. சிங்கமும் வெள்ளாடும்

ஓர் வனத்திலே வசித்துக்கொண்டிருந்த பிராணிகளை யெல்லாம் அந்த வன அரசனாகிய சிங்கமானது பட்சித்துக் கொண்டே வந்தது. அதைப் பார்த்திருந்த ஓர் கிழ வெள்

ளாடானது மற்ற மிருகங்களைப் பார்த்து, ‘நாம் இதற்கு ஓர் உபாயம் செய்யவேண்டும். இவ்வாறு அச்சிங்கம் செய்ய நாம் இடங்கொடுத்தல் தகாது; அக்கொடியவனை இந்நாட்டைவிட்டு ஓடும்படி செய்ய எனக்கு ஓர் உபாயந் தெரியும்’ என்றது. அப்பொழுது மற்ற மிருகங்கள் அனைத்தும் மிகவு மானந்தமடைந்து, ‘நீர் உடனே அப்படிச் செய்யவேண்டு மென்று பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்’ என்றன.




தைரியசாலியாகிய அக்கிழ வெள்ளாடு, பாதை மருங்கிலிருந்த கெபியொன்றில் வளர்ந்து தொங்கிய தாடியோடும்

நீண்டு வளைந்த கொம்புகளோடும் படுத்துக்கொண்டது. அப்பொழுது அந்தப் பாதை மார்க்கமாய்ச் சென்ற மிருகேந்திரனானது இதைக் கண்டு அந்தக் கெபிவாயின் பக்கத்தே சென்றது. அதைக்கண்ட கிழ வெள்ளாடு 'சரிதான் என் எண்ணம்போலவே நீயே இங்கு வந்துவிட்டாய், இதுவும் என் பாக்கியந்தான்' என்றது. இந்த வார்த்தையைக் கேட்டவனவரசன் 'நீ யாது பேசுகின்றாய்?' என்று வினவியது. கிழ வெள்ளாடு பிரதியுத்தரமாக 'என்ன, நீ அப்படிக் கேட்கின்றாய்; யான் இந்தக் கெபியில் நெடுநாளாய்ப் படுத்துக்கொண்டு இருக்கின்றேன். மேலும் இதுநாள்வரையிலும் யான் நூறு யானைகளையும், நூறு கடுவாய்ப் புலிகளையும், ஆயிரம் ஓநாய்களையும், தொண்ணூற்றொன்பது சிங்கங்களையும் தின்று ஏப்பம் விட்டிருக்கின்றேன். யான் பட்சிக்க இன்னும் ஓர் சிங்கந்தான் வேண்டியது. யான் அதற்கென்று வெகு பொறுமையுடன் வெகுநாளாய்க் காத்திருந்தேன். இன்று தேவாநுக்கிரகத்தினால் நீ வந்து எனக்குப் பலித்தாய்' என்றுசொல்லிக் கொம்புகள் ஆடவும் தொங்கிய தாடி அசையவும் தன் ஜடைபற்றிய தேகத்தைக் குலுக்கிச் சிலிர்த்துச் சிங்கத்தின்மீது பாய்வதுபோலச் சற்பனை செய்தது.

இதெல்லாவற்றையும் செவியுற்ற சிங்கமானது இதைப் பார்த்தாலோ வெள்ளாடுபோற் காண்கின்றது. ஆயின் பேச்சோ வெள்ளாட்டின் பேச்சுப்போல் தோன்றவில்லை; ஏதோ ஓர் துஷ்டப் பேய் இந்த ரூபங்கொண்டு வந்திருக்கின்றது. இதை எதிர்த்துப் போர்புரிவதிற் பிரயோஜனமில்லை. பராக்கிரமத்தைவிடப் புத்தியே அதிக மேலானதாய்ப் பயன்படும். ஆதலால் பராக்கிரமத்தைப் பாராட்டாமல் இக்கணமே காட்டுக்குத் திரும்பிவிடுவது யுக்தமென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு பின்வாங்

கிற்று. அப்பொழுது அக்கெபியிற் படுத்துக்கொண்டிருந்த வெள்ளாடானது சிங்கத்தைப் பின்னும் திகிலுறச் செய்ய வெண்ணி, 'ஏ சிங்கமே! எனக்கோ பசி அதிகமாயிருக்கின்றது. ஆயினும் நீ இவ்வனத்தில் இனிமேற் பிரவேசிப்பதில்லை என்று உறுதி செய்வாயாயின் உன்னைத் தின்னாது விடுவேன்' என்றது. கேசரி உயிர் பிழைத்தாற் போதுமென்றெண்ணி, 'ஐயனே! தம்மைப்போன்ற பெரியோர் வசிக்கும் இவ்வனத்திற் பரம துஷ்டனாகிய யான் சஞ்சாரஞ்செய்தல் தகாது. யான் இதைச் சிறிதும் சிந்தியாது செய்த அபசாரத்தை மன்னித்து என்னைத் தப்பி யோட விடுவீராயின் யானாவது என்னைச் சேர்ந்த என் பந்தினராவது மீண்டும் இவ்வனத்தை நண்ணேம்' எனமொழிந்தது. பராக்கிரமசாலிபோற் பாசாங்கு செய்த வெள்ளாடு சிங்கம் தொலைந்தாற் போதுமென்றெண்ணி அதன் வேண்டுகோளுக் கிசையவே, சிங்கமும் தன் ஜாதியாருடன் அவ்வனத்தை விட்டு முற்றிலும் நீங்கியது.

சிங்கம் அவ்வனத்தைவிட்டு அகலவே மிருக ஜாதிகள் யாவும் சிறிதும் பயமின்றிச் சுகமாய் வாழ்ந்தன. இதற்குக் காரணம் அக்கிழ வெள்ளாடாதலால் அவையனைத்தும் அவ்வாட்டின் வாசஸ்தலத்திற்குச் சென்று அதை மிகப் புகழ்ந்து கொண்டாடின. 'புத்திமான் பலவான்' என்பது இக்கதையால் தெளிவாகின்றது.

# செய்யுட் பாகம்

பூதஞ்சேந்தனுர் அருளிச்செய்த

# இனியவை நாற்பது

(சுருக்கம்)

1. யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

2. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயம்
செய்யாமை முன்னினிது சேங்கோல னுகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

3. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வல்லவைக எல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

4. தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கும்
அன்புடைய ராத லினிது.

5. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகறல்
எனமாண்பு தானினிது நன்கு.

6. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வியினிதே
மயலிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றே லினிது.

7. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

8. குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
அவர்மழலைக் கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்தும்
மனனஞ்சா னாக லினிது.

9. கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது.

10. நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீதலே நன்று.

11. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்த லினிது.

12. பிறன்மனைப் பொருள்வவ்வான் வாழ்தலினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணு மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

13. வெல்வது வேண்டி வெகுளாதா னேன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்பட்டார்
செய்வது செய்த லினிது.

14. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோன்முறையாற் கோட லினிது.

15. கயவரைக் கையிகந்து வாழ்த லினிதே
உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது.

16. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது.

17. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

18. எல்லியம் போது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

19. சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
எத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

20. பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
உற்றபே ராசை கருதி யறனொருஉம்
ஒற்க மிலாமை யினிது.

கபிலதேவர் அருளிச்செய்த

# இன்னா நாற்பது

(சுருக்கம்)

21. கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடமொறி வாழ்த லுயிர்க்கு.

22. எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

23. ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரின் வனப்பின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

24. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப் போக்கின்னா
அருளிலார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லான் வண்மை புரிவு.

25. உடன்பா டிலாத மனைவிதொழி லின்னா
இடனில் சிறியாரோ டியாத்தநட் பின்னா
இடங்கழி யாளற் தொடர்பின்னா வின்னா
கடமுடையார் காணப் புகல்.

26. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

27. குலத்திற் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணின்மை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

28. மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தி னுழவு.

29. ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா
பார்த்துண லில்லா ருழைச்சென் றுணவின்னா
மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
ஒத்திலாப் பார்ப்பா னுரை.

30. பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல்.

31. கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
அல்லாதான் சொல்லு முறையின் பயனின்னா
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

32. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மையி லாளர் பகை.

33. பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
அடுமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடத்துக் கைவிடுவார் நட்பு.

# நீதிவெண்பா

34. அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலா—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரேலும்புங் கர்த்தபத்தின்
றேலுமல்லால் வேறுமுண்டோ சொல்.

35. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

36. ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றேரு—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதோருதே சத்தே
தெறிந்தவிடத் தன்றே சிறப்பு.

37. தூய வறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாங்
காயும் விடங்கருடற் கில்லையா—மாயுங்காற்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீத மில்லையாந்
துன்முகனுக் குண்டோ சுகம்.

38. ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போ
ரீயு மவர்வருந்தா தேற்றலறம்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி யரிப்பதுபோ
லச்சமுற வாங்க லகம்.

39. பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தணமுஞ்
சின்னம் படவருத்தஞ் செய்தாலு முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பா
னற்குணமே தோன்று நயந்து.

40. தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரேன் றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலு
நண்ணுவரோ மற்றதனை நாட்டு.

41. காந்துநறும் புன்னை கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லாற் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு.

42. நல்லொழுக்க மில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு [டப்
நல்லொழுக்க மில்லாச்சொ னண்ணுமே — கொல்லுவி
பாம்பென வுன்னுரோ பழுதையே யானுலுந்
தூம்பமரும் பற்றுடுத்தாற் சொல்.

43. வெய்யோன் கிரண மிகச்சுடுமே வெய்யவனிற்
செய்யோன் கிரணமிகத் தீதாமே—வெய்யகதி
ரெல்லோன் கிரணத் தெரியினிலு மெண்ணமிலார்
சொல்லே மிகவுஞ் சுடும்.

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

# நீதிநெறி விளக்கம்

44. நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மற்று.

45. அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

46. எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

47. வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

48. கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

49. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று.

50. கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படுமே் இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

51. தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

52. பிறரார் பெருஞ்சுட்டு வேண்டுவோன் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

53. கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

புகழேந்திப் புலவர் செய்தருளிய

# நளவெண்பா

## (சுருக்கம்)

54. காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்ம்மொழித
லீதன் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

55. அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

56. உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

57. வேலை கரையிழந்தால் வேத நெறியிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தாற்—சீல
மொழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
யழிவரோ செங்கோ லவர்.

58. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

59. சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தால
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

60. சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானங் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

TB 0310 N2

# அரிச்சந்திர புராணம்

61. செய்மை யண்மையி லுயிர்க்கோரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

62. புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையே னுமருண் டேயினு நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ.

63. இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தேனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டேழ்கலா வெரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினு மெய்மையை விடேமால்.

64. பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினுங் கட்டுரை யிழக்கிலே னென்னா
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறந்தான்.

C. L. S. PRESS, MADRAS—19[illegible]4.

## புதிதாய் வெளியிட்டிருக்கும்
## வித்தியா மாலிகை என்னும்
## STANDARD TAMIL READERS

கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் (C. L. S.) இப்பொழுது அச்சிட்டு வெளியிட்டிருக்கும் 'வித்தியா மாலிகை' என்னும் சிறு தமிழ் வாசக புத்தகங்கள் பள்ளிக்கூட முகாமைக்காரர் ஆசிரியர் என்னும் இருதிறத்தவராலும் விசேஷமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. இத்தொடர்ப் புத்தகங்கள் அரிதும் புதிதுமான அநேக விஷயங்களைத் தம்முள் அடக்கியிருப்பதுமன்றி, பள்ளிக்கூடங்களில் பற்பல வகுப்புகளுக்கேற்கச் சிறந்த தெள்ளிய நடையில் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகட்குப் பொருந்துமாறு எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அநேக அழகான படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை இவ்விராஜதானியில் மாத்திரமல்ல, தமிழ் வழங்கும் எந்நாட்டிலும் பயன்படவேண்டுமென்பதே எமது கோரிக்கை.

### வித்தியா மாலிகை

| | அ. | பை. | | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| பால பாடம் ... | 1 | 6 | மூன்றாம் புத்தகம் ... | 4 | 6 |
| முதற் புத்தகம் ... | 3 | 0 | நான்காம் புத்தகம் ... | 5 | 0 |
| இரண்டாம் புத்தகம். | 4 | 0 | ஐந்தாம் புத்தகம் ... | 7 | 0 |

### பள்ளிக்கூட தமிழ்ப் புத்தகங்கள்

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகளுக்குப் பொருந்தியிருக்கின்றனவென்று வித்தியா தலைவர் (Director of Public Instruction என்னும் அதிகாரி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

| | | | அ. | பை. |
|---|---|---|---|---|
| முதற் பாடம் | ... | ... | 1 | 6 |
| முதலாம் வாசக புத்தகம் | ... | ... | 3 | 0 |
| இரண்டாம் வாசக புத்தகம் | ... | ... | 4 | 6 |
| மூன்றாம் வாசக புத்தகம் | ... | ... | 4 | 6 |
| நான்காம் வாசக புத்தகம் | ... | ... | 4 | 6 |
| ஐந்தாம் வாசக புத்தகம் | ... | ... | 5 | 0 |
| ஆறாம் வாசக புத்தகம் | ... | ... | 5 | 0 |
| ஏழாம் வாசக புத்தகம் | ... | ... | 7 | 0 |
| எட்டாம் வாசக புத்தகம் | ... | ... | 8 | 0 |
| ஒன்பதாம் வாசக புத்தகம் | ... | ... | 8 | 0 |
| முதற் புத்தகம் | (S. G. Daniel) | ... | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | ( ,, ) | ... | 3 | 0 |
| மூன்றாம் புத்தகம் | ( ,, ) | ... | 4 | 0 |
| நான்காம் புத்தகம் | ( ,, ) | ... | 5 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | ( ,, ) | ... | 6 | 0 |
| முதற் புத்தக அநுபந்தம் | ( ,, ) | ... | 3 | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பாலர் பாடப் போதகன். (The Tamil Alphabet Teacher) தகரப்பெட்டியுடன் | 3 | 12 | 0 |
| வார்த்தை அமைக்கும் விளையாட்டு ... | 0 | 12 | 0 |

14 E. 5 M. T. 6-2 m.